Reg. No. M.

ஸமரஸபோதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E சூரியநாராயண அய்யர் பி.ஏ., பி.எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor.

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆனி௴ ௰௬௳ 30th June 1920. தஞ்சாவூர். | பிரதி 3.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல் சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. இதன்முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ	5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ	7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	4—0—0

குறைந்த விளம்பர விகிதம்:—

பத்தி 1-க்கு மாதம் 1-க்கு	ரூ	10—0—0
இஞ்சு 1-க்கு	ரூ	1—0—0

For One month 4 insertions per month per column Rs. 20-0-0.
Casual Advertisements @ 1-0-0. per inch.

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுகிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோர்க்கு தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழுவிபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

நவீனம்! ஓ ரி ய ண் ட ல். நாகரீகம்!!

சுய ஆட்சிக்கு வழிகாட்டப்பட்டபட்டு அங்கவஸ்திரங்கள்.

ஓம்ரூல் சேலைகள். (காப்பி கலர் டீக்கலர். கோக்கோ கலர் ச[illegible] கலர்.) ஜமக்காளங்கள் எங்களிடம் மிக ஸரஸமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— ஓரியண்டல் வேர் [illegible]வுஸ், அய்யங்கடை[illegible] தஞ்சாவூர்.

லண்டன் வாச்சு & கோ., திருவாதி தஞ்சை ஜில்லா.



இதை ஒவ்வொருவரும் கவனியுங்கள்.

தக்க வாயம் எங்களுடைய உண்மையை ஒரே தடவை பரிசோதித்து பாருங்கள் அப்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வரவழைத்து திருப்தி இல்லாவிட்டால் உடனே ருபாயை வாபஸ் செய்து விடுகிறோம்.

விபரம்:—புதிய பாக்கெட் லீவர் வாச்சு 5 வருஷம் உத்திரவாதமும் நடுத்தாளவும் இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குச் சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

1.	புதிய பாக்கெட் லீவர் வாச்சு	5—0—0
2.	௸ மாதிரி கையில் கட்டிக் கொள்ளக்கூடியது சிலண்டர்	6—0—0
3.	௸ அசல் சொக்க வெள்ளி.	8—0—0
4.	௸ மாதிரி நிக்கல் ரேடியம் டையலுள்ளது	7—8—0

இதைத்தவிர ஒமிகா, பிரிடியன், கெடியாரங்கள் விலை சரசமாய் வேண்டியவர்கள் அரை அணா

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்.

சென்றவாரபோதினியின்
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற வார போதினியின் 12 ம் பக்கம்
(தொடர்ச்சி)

சிறையினின்றும் திலகரும் அகர்க்கரும் வெளிவந்ததும் அவர்கட்கு பம்பாய் மாசாணவாசிகள் செய்த. அளவிடற் கரியது மரியாளததிலகர்பெருமானை உபசரிப்பதற்காகவொருவரவேற்புக் கூட்டம் பூனாவில்நியமிக்கப்பட்டுச் சிறைமீண்டவுடன் அவருக்கு வந்தனப் பத்திரமொன்று வழங்கப்பட்டது அன்றிரவு திலகரின் ஆதீனத்தின் கீழ் நாடகமொன்று நடைபெற்றது. அதில் கோபாலகிருஷ்ண கோகலே முதலிய தேசாபிமானிகள் ஆட்டக்காரர்களாய் விளங்கினார்கள்.

நெஞ்சுத்தோர் கணத்திலு நீங்கிலான்.
நீதமேயோரு ருவெனத் தோன்றினேன்.
வஞ்சகத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்குமாறு மனதிற் கொதிக்கின்றேன்;
துஞ்சு மட்டு மிப்பாரத நாட்டிற்கே
தொண்டிழைக்கத் துணிந்தவர் யாவரு
மஞ்செழுத்தினைச் சைவர் மொழிதல் போல்
அன்போடோதும் பெயருடையாரிய

சி. சுப்பிரமணிய பிரதி.

ஸ்டாம்பு அனுப்பி கிரய ஜாப்தா பெற்றுக்கொள்ளலாம். ஆர்டர் செய்வோர் பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு எழுதவும்.

V. திலகரும் ஆசார சீர்திருத்தமும்

இவ்விதம் திலகரும் அகர்க்கரும் ஒரே மனதுடன் ஒற்றுமைத்து வரு நாளில் இவ்விருவருக்கும் ஆசார சீர்திருத்த சம்பந்தமாய் அபிப்பிராய பேதமேற்பட்டது. இந்தியாவில் அரசியல் சுதந்தரம் வழங்கப்படுமுன், மத சமூக சீர்திருத்தங்களுண்டாக வேண்டுமென்பது அகர்க்கரின் கொள்கை. திலகர் பிரான் இவ்வெண்ணத்திற் கிணங்கவில்லை. மேனாட்டுக் கலைகளிலும் கீழ் நாட்டுச் சாத்திரங்களிலும் மிகுந்த தேர்ச்சி வற்றவராதலின், திலகர் இவ்வமயம ஆசார சீர்திருத்தமென்றவோர் கொடும் பானத்தை இந்திய சமூகத்தினுள் புகுத்தலாகாதெனக் கருதினார். இந்திய நாடு வறுமை நீங்கிக் கல்வி யோங்கி முன்னேற்றமடைய வேண்டுமானால் சுய ஆட்சி பெறவேண்டும். அச் சுய நிர்ணயமடையுமுன் மதச் சண்டைகளையும் வகுப்பு வித்தியாசங்களையும தூண்டிவிடலாகாது. அப்படி ஆசார சீர்திருத்தக் கிளர்ச்சியை இப்பொழுது பரவவிட்டால் இந்து சமூகத்தின் ஒற்றுமைக் குறையுண்டாவதுடன், அதிகார வர்க்கத்தினரிடமிருந்து நிர்வாக சக்தியைக் கைப்பற்றமுடியாதென்பது திலகரின் தீவிரமான நம்பிக்கை. இஃதன்றியும் பாரத பூமி பழய வுன்னதப் பதவியைப பெறுவதாயிருந்தால் நாட்டிலுள்ளோர் புராதன நாகரீகததைக் கைவிடலாகாதென்றும் தொன்மையாய் வழங்கி வரும் அனுட்டானங்களை யலட்சியஞ் செய்வது பிசகென்றும் மேனாட்டு நாகரீகம் மிருக சக்தியாலுண்டானதென்றும் நமது தேசபக்தியும் அதன் முறைகளிலும்மெய் மறந்தவன்பு உதிக்கவேண்டுமென்றும் திலகர் பெருமான் வற்புறுத்தி வநதார். சமூக வாழ்க்கையில் கெட்ட வழக்கங்களிருநதால் அந்தந்த வகுப்பினர்களே அவைகளைச் சீர்திருதத வேண்டுமெனவும் அந்நிய நாட்டினர்களடங்கிய இந்திய அரசநங்கத்தார் எவ்விதத்திலும் தலையிடலாகாதெனவும் பாரத தேவி முழுச் சுதந்தரமடைந்த பின்னர், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதி நிதிகளடங்கிய சட்ட சபையில் சீர்திருத்தங்கள் யோசிக்கப்படவேண்டுமெனவும் திலகரின் அபிப்பிராயமாயிருந்தது. மேலும் இந்திய நாகரீகத்திற்கொவ்வாத போலி சீர்திருத்தங்களை மாயையால் உண்மையென நம்பி நமது பழய நடைகளை அநேக அறிவிலிகள் குறைகூறுகிறார்களென்பது திலகரின் திண்ணமான நோக்கம்.

இத் தகைய அபிப்பிராய பேதங்கள் முதிரந்தின் பயனாக, அகர்க்கர் 1888 ம் வருடம் கேசரி பத்திரிகையில் தான் வகித்துவந்த வுத்தியோகத்தைத் துறந்தனர். ஆகவே இரு பத்திரிகைளும் திலகர், கெல்கர் கோகலே யென்ற மூவர் வபமாயிற்று. கெல்கருக்கு வேறு வேலைகளினால் கேசரியில் கவனஞ்செலுத்த முடியவில்லை. இது காரணம் பற்றித் திலகர் பெருமானே இரு பத்திரிகைகளுக்குந் தலைவரானார். கொஞ்ச நாட் சென்ற பிறகு, கேசரி, மராட்டா பத்திரிகைகள் திலகரைச் சேரவேண்டுமெனவும் ஆரிய பூஷன் அச்சுக்கூடம் கெல்கர், கோகலே வசமாக வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு அதன்படியே ஒருபாக மேற்பட்டது. திலகர் வயம் கேசரி வந்த பிறகு அதற்குண்டான பிரதாபத்தை ஆயிரம் நாட்படைத்த ஆதிசேடனாலும் சொல்லி முடியாது. இதுகாலை அப்பத்திரிகைக்கு 22,000 சந்தாதார்களிருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான பேர்கள் மராட்டா பத்திரிகையை வாசித்து அகமகிழ்கிறார்கள். மஹ்ராஷ்டிர பூமியில் பெரிய அதிகாரிகள் முதல் தாழ்ந்த வகுப்பினர் வரையில் கேசரியைப் படிக்காதவர் கிடையாது.

அகர்க்கர் திலகரை விட்டு விலகியவுடன் பூனாவில் பெண்புணர்ச்சி மசோதாவைப்பற்றிப் பலமான விவாதங்கள் நடைபெறலாயின. திலகர் பிரான் மசோதாவைக் கண்டித்தார். நமது வாழ்க்கையின் ரகசியத்தை யுணராது, இந்திய ஆட்சி புரியும் அந்நியநாட்டினர் பழய நாகரீகத்தை யொட்டி அனுட்டிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்களை அழிக்க முயலுவது மிகவும் இழிவான காரியமென்று படிப்பில்லாதவர்களும் எளிதில் அறியும்படித் திலகர் உபதேசித்து வந்தார். இதனால் பூனாவில் ஆசார சீர்திருத்தக்கட்சியினரென்றும் நாட்டு முறைகளைத் தழுபுவரென்றும் இரு பிளவுகள் உண்டாயின. அகர்க்கருக்கும் அவரைச் சார்ந்துள்ள சிலருக்கும் திலகர் மீது பொய்ப் பழிகளைச் சுமத்துவதும் வசைச் சொல் வழங்குவதும் தொழிலாக விருந்தது. ஆனால் பெரும் பான்மையோர் திலகரைத் தெய்வமாநகக் கொள்ளலாயினர்.

VI. ஓரியன்—Orian.

ஆரியரின் வாலாற்றை யறிவிக்கும் ஒரு நூலின்
சீரியலைப் புகழாத சிறப்புடையோர் செகத்துள
[ரோ. திரு. வி. க.

இத்தன்மைய பல தொந்திரவுகளுக்கிடையில் திலகர் பிரான் வேதங்களை ஆராய்ச்சி செய்து அவைகளின் உண்மையை யறிய ஆசைகொண்டவராய் தன் காலத்திலொருபங்கை அவ்வித முயற்சியில் கழிக்கலாயினார். தத்துவ நூல் முறைகளைத் தொடர்ந்து வேதங்களின் ஒவ்வொரு அங்கத்தையும் உணர்ந்து கி. பி. 4000 ம் வருடங்களுக்கு முன்னமேயே ரிக் வேதம் உலகத்திற்கு வெளியாயிற்றென்று தகுந்த முகாந்தரங்களினால் தாபித்தார். லண்டன்மா நகரத்தில் 1892 ம் ஆண்டு கூடிய “ஓரியண்டல் காங்கிரஸ்” சபைக்குத் தான் இதைக் குறித்து எழுதிய வியாசத்தைப்பற்றி அபிப்பிராயங் கூறுமாறு தபால் மூலமாயனுப்பினார். மேனாட்டுக் கல்வியிற் சிறந்த மாக்ஸ் முல்லர், வீபர் விட்னி முதலிய பெரியோர் இதிலடங்கிய ஏராளமான சங்கதிகளை வியத்துவானசாத்திர தத்துவ ஆராய்ச்சியால் எழுதப்பட்டதெனக் கொண்டாடினார்கள். மறு வருடம் இவ்வியாசத்தை விரிவாக்கி ஆரியரின் வரலாற்றை அறிவிக்கும் “ஓரியன்” என்ற புத்தகமாகப் பதிப்பித்தார். விட்னியென்றவோர் சீமான் அமெரிக்கா ஓரியண்டல் சங்கத்தினுதாவில் அச்சிடப்பட்ட வொரு பத்திரிகையில் திலகர் புத்தகத்தைப் புகழ்ந்து எழுதியிருக்கும் சிறப்பை என் போன்ற இருவர்கள வருணிக்க தற்பாலதோ? ப்ளூம்பிலடு என்ற வேறொரு கல்வி யாளர் உலகத்திலுள்ள பண்டிதரெல்லாம் திலகரே சிறந்தவரென்று ஓர் பிரசங்கத்திற் கூறியிருக்கின்றனர்.

இப்படியிருக்குங்கால் பரோடா மாகாணத்தில் வசிதிக்கும் இலாகாவில் ஒரு பதவி வகித்துவந்த ராவ்சாகிப் பாபத் என்பவர் மேல் அதிகார வர்க்கத்தினர் லஞ்சக் குற்றஞ் சுமத்தி விசாரணை தொடர திலகர் எதிரிபக்கம் நியாயவாதியாயமர்ந்தார். பாபத் திலகருக்கு உண்மையான நண்பர். அவர் நிரபராதி யென்றும் அதிகாரிகள் வீண்பழி சுமத்தினார்களென்றும் திலகர்பிரான் நன்கறிந்தவராதலால் தன்னாலியன்ற அளவு அவருக்காக வாதித்துத் தண்டனையினின்றும் விடுவித்தார். பிரதிபுபகாரத்தைக் கருதாமல் நண்பருக்காக வுழைத்த திலகரை யாவரும் மனமார வாழ்த்தினார்கள். பரோடா அரசாங்கத்திற்கு வற்பட விருந்த பெருத்த அவமானம் திலகரின் முயற்சியால் நீங்கியது. திலகரின் சட்டப் பயிற்சியும் வாதிக்குந்திறனும் நன்கு வெளியாயிற்று. “செய்யாமற் செய்த உதவிக்கு வைகைமுகமும் வாகையும் ஆற்றிலரிது.” என்னும் பழமொழிக்கேற்பத் திலகர் சுய நலங் கருதாது பிறர் நன்மையிலேயே கண்ணுங்கருத்துமாக விருப்பது இவ்வுதாரணததினால் விளங்குகிறது.

தஞ்சாவூர்
27—6—20. } ஆர். கணேசன்.

(இன்னும் வரும்)

26–வது சென்னைமாகாண மகாநாடு

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

சென்னை மாகாணத்தின் 26-வது மகா நாடு திருநெல்வேலியில் தாம்பிர பரணி தீரத்தில் இம்மாதம் 22 ந் தேதி மாஜி அட்வ கேட் ஜெனரலும் ஹைகோர்ட்டு வக்கீலுமான ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாசய்யங்கார் அக்கிராசனத்தில் கூடியது. இம்மகா நாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் முக்கியமானவைகளாதலால் அவைகளை மாத்திரம் நாம் ஈண்டு வெளியிடுகிறோம்:—

அயல் நாடுகளில் இந்தியர்கள்.

(ஏ) தென்னாப்பிரிக்காவிலும், முக்கியமாக டிரான்ஸ்வாலிலும் வசித்துவரும் இந்தியர்களுக்குச் சுயேச்சையுள்ள ஏகாதிபத்தியத்தின் பிரஜைகள் என்கிற ஹோதாவில் கிடைக்க வேண்டிய சரிசமத்துவமான சமூக ராஜீயசுதந்தரங்களைக்கொடாமல் மறுக்கவும் அவர்களுடைய, சரீர சுதந்தரம், சொத்து சுதந்தரம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சுயேச்சையான குடிகள் என்கிற அந்தஸ்து இவைகளைப் பறித்து விடவும் அங்குள்ள வெள்ளைக்காரர்கள் மறுபடியும் முயற்சி செய்து வருவதை இந்தக் கான்பரென்ஸ் பலமாகக் கண்டிப்பதுடன், அவர்களுக்குக் கிரமமாகவுள்ளசுதந்தரங்களை

(11ம் பக்கம் பார்க்க.)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளை காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ப. ர்.)
ஸமரஸபோதினி தஞ்சாவூர்.



"Be just aud fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's& Truth's"

ரௌத்திரி௵ ஆனி௴ ௰௭-ம்௳
30th JUNE 1920.

26-வது சென்னை மாகாண மகாநாடு.

இம் மாகாண மகா நாடு திருநெல்வேலியில் சென்ற 21 தேதி நடைபெற்றது. அச்சபைக்கு சுமார் 3000 பிரதிநிதிகள் பல ஜில்லாக்களிலிருந்து வந்திருந்தார்கள். அநேக ஸ்திரீகள் பிரதிநிதிகளாக பிரசன்னமாயிருந்தனர். வெகு விநோதமான கல்யாணப் பந்தலில் கான்பரென்ஸ் கூடிற்று. பிரதிநிதிகளைத் தவிர விஸிடர்கள் சுமார் 3000 பேர்கள் வந்திருந்தார்தள். நூற்றுக்கணக்கான வாலண்டியர்கள் சுறு சுறுப்புடன் வேலை பார்த்தார்கள். திருநெல்வேலியிலுள்ள ஜனங்களின் உத்ஸாகம் அளவற்றதாயிருந்தது. பெரிய உத்ஸவங்களுக்கு வருவது போல் இம்மகா சபைக்கு சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களிலிருந்து நூற்றுக் கணக்கான நிலச் சுவான்தார்கள் வந்திருந்தார்கள். வியாபாரிகளும் வந்து கூடினார்கள். எங்கு பார்த்தபோதிலும் ஜனங்கள் குதூகலத்துடன் மகா சபையைப் பற்றியும் அக்கிராஸனாதிபதியைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

உபசாரணை கமிட்டியின் தலைவர் ஸ்ரீமான் N. A. V. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் நல்வரவு பத்திரம் வாசித்து முடித்த பின், ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் அக்கிராஸனத்தில் அமர்ந்தார். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் கல்வியிலும், புத்தியிலும், உதார குணத்திலும், தைரியத்திலும் மிகச் சிறந்தவர். கொஞ்ச நாளுக்கு முன் தன்னுடைய பெரிய உத்தியோக பதவியிலிருந்து விலகிக்கொண்டார். தன் தாய்நாட்டிற்கு ஊழியம் செய்யவேண்டுமென்றுகருதி சுய நலத்தைப் பாராட்டாமல் தேச மகா ஜனங்களின் க்ஷேமத்தில் கவலை கொண்டவராய் தேசத்தொண்டு செய்ய முன் வந்திருக்கிறார். அவர் கவர்ன்மெண்டாரோடு நெருங்கி பழகினவர். அதிகார வர்க்கத்தினரின் மர்மங்களை நன்கு அறிந்தவர். பயமன்னியில் தன் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்கக்கூடியவர். அவர் பல முக்கியமான விஷயங்களைப்பற்றி தன் பிரசங்கததில் குறிப்பிட்டிருக்கிறார். அப்பிரசங்கம் மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அக்கிராஸனாதிபதி தன் பிரசங்கத்தில் காங்கிரஸ் மகாசபையின் கொள்கையை ஆதரித்து கட்டுப்பட்டிருக்கிறார். அமிருத ஸரஸ் காங்கிரஸில் சீர்திருத்த சட்டத்தைப்பற்றி செய்யப்பட்ட தீர்மானத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்த சீர்திருத்த சட்டத்தினால் யாதொரு பயனும் விளங்காது என்று எடுத்துச் சொல்லுகிறார். கவர்னருக்கு ஏற்கனவே இருந்த அதிகாரத்தைக் காட்டிலும் அதிகமான அதிகாரம் ஏறபட்டிருக்கிறதென்பதை விளக்கிக் காட்டியிருக்கிறார். மந்திரிகளுக்கு ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் பேரிலும் மற்ற சிப்பந்திகள் பேரிலும் யாதொரு விதமான அதிகாரமும் இல்லையென்று சொல்லியிருக்கிறார். மேலும சட்டசபை மெம்பர்களின சுதந்திரங்கள் குறைந்துவிடுமென்றும் சட்டசபை மெம்பர்களின் தொகை 127 ஆக இருப்பது கூடாதென்றும், அதற்குஇரண்டு மடங்கு அதிகமாகஏற்படவேண்டுமென்றும், தொழிலாளருக்கு சில ஸ்தானங்களை ஒதுக்கி வைக்க வேணமென்றும், ஸ்திரீகளுக்கு "வோட்" சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தெளிவாய் கூறியிருக்கிறார்.

பஞ்சாப் அக்கிரமங்களையும் ராணுவ அமுலையும் மிகவும் கண்டித்திருக்கிறார். ஹண்டர் கமிட்டியின் ரிபோர்ட்டு தேச மகா ஜனங்களுக்கு திருப்தி தரவில்லையென்று சொல்லியிருக்கிறார். கிலாபத்து விஷயத்தில் கவர்ன்மெண்டாரும் நேச ராஜ்யங்களும் சரியாக நடக்கவில்லை என்றும் அவ் விஷயத்தில் நியாயம் ஏற்படாத பட்சத்தில் விபரீதங்கள் விளையுமென்றும் எடுத்துக் காட்டி இருக்கிறார். இவைகளைப்பற்றி தீர்மானங்கள் சபையில் கொண்டுவரப்பட்டன. பிரதிநிதிகள் மிகவும் உத்ஸாகத்துடனும் ஊக்கததுடனும் தைரியத்துடனும் அங்கிகரித்தினர். தீர்மானங்களை மற்றொரு பக்கத்தில் பார்க்கலாம்.

கான்பரன்ஸ் நடவடிக்கைகள் நடந்த விமரிசியைப்பார்க்குங்கால் நமது தேசம் கூடிய சீக்கிரத்தில் முன்னேற்றம அடையும் என்பதில் சந்தேகமில்லை. தற்கால நிலைமையை அறியாதவர்கள் ஒருவரும் இல்லை. மிதவாதித் தலைவர்களாகிய மிஸஸ் அன்னிபெஸண்ட், கனம சாஸ்திரியார், ஸ்ரீமான் ஸி. பி. இராமசுவாமி அய்யர் முதலியவர்கள் சபையில் பிரசன்னமாயிருந்தார்கள். அவர்கள் மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். சபையோர்கள் பொருமையுடனும் நிதான புத்தியுடனும் அவர்கள் அபிப்பிராயத்தை காது கொடுத்து கேட்டார்கள். கேட்ட பிறகுதான் பிரதிநிதிகள் ஒற்றுமையாமையைப பற்றியும், எலெக்ஷன்கள் விஷயமாகவும், சீர்திருத்த சட்டத்தின் விதிகளைப்பற்றியும் தங்களுடைய "வோட்டை" கொடுத்தார்கள். விஷயங்களை எடுத்து பிரதிநிதிகள் பேசும் பொழுது மிதவாதத் தலைவர்கள் ஆச்சர்யமடைந்தார்கள். தேச மகா ஜனங்களின் உணர்ச்சி இன்னதென்று ஒருவாறு அறிந்தார்கள். இனி தங்களுடைய மிதவாதக் கட்சி பலிக்காதென்று உணர்ந்திருப்பார்களென்று மீண்டும நாம் சொல்லவேண்டியதில்லை. இந்தியாவிற்கு தற்சமயமே பூரண சுயாட்சி கொடுபடவேண்டுமென்றே அபிப்பிராயப்பட்டிருப்பார்கள் என்பது திண்ணம். இவ்வபிப்பிராயத்தை அதிகார வர்க்கத்தினிரிடம் வெளியிடுவதுடன் தேச மகா ஜனங்களின் கட்சியில் சேர்ந்து கொண்டு காங்கிரஸ் தீர்மானப்படி நடப்பார்களென்று நம்புகிறோம்.

மகா சபையின் வைபவத்தை அதிகார வர்க்கத்தினர் நேரில் பார்க்கவில்லையே என்று துக்கிக்கிறோம். பார்த்திருப்பார்களாகில் உடனே தங்களுடைய கொள்கைகளையும் நமமை ஆளும முறைகளையும் மாற்றிக் கொள்வார்கள் என்பது நிச்சயம்.

மாகாண மகா நாட்டில் விஷயங்களெல்லாம் தமிழ் பாஷையிலேயே விவாதிக்கப்பட்டன. பேசினவரொவ்வருவரும் இனிமையான தமிழில் பேசினார்கள். சண்டை சச்சரவன்னியில் ஹிந்துக்களும் முகம்மதியர்களும், பிராமணர்களும், பிராமணரல்லாதார்களும், ஆங்கிலம் கற்றவர்களும், ஆங்கிலம அறியாதவர்களும் எல்லோரும் ஒன்று கூடி ஒற்றுமையுடன் சபையின் நடவடிக்கைகளை நடத்தினதைப் பார்த்தால் நாம் எவ்விதத்திலும் பூரண ஜவாப்தாரியான ஆட்சியை வகிக்க யோக்கியதை உள்ளவர்களென்று கூறலாம்.

ஸ்பெஷல் காங்கிரஸ்.

நமது தேச மகா சபை சில முக்கியமான விஷயங்களை ஆலோசனை செய்யும் பொருட்டு வருகிற ஆகஸ்ட் மாதம் கடைசியில் ஆந்திர தேசத்திலிருக்கும் பர்ஹாம்பூரில் கூடப்போகின்றது. அச்சமயம் பாஞ்சால நாட்டில் நடந்த சம்பவங்களைப்பற்றியும், கிலாபத்து விஷயமாகவும், சீர்திருத்த சட்ட சம்பந்தமான விதிகளைப்பற்றியும்பல ராஜரீக நிபுணர்களும், மேதாவிகளும்ஒன்றுகூடி ஆலோசிக்கப்போகிறார்கள். இவ்விஷயங்களைப்பற்றி செய்யும் தீர்மானங்களிலிருந்தே நம் தேசத்தின் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படும்.

இவ் விஷயங்களைப்பற்றி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்கிற எண்ணத்துடன் சில நாட்களுக்கு முன் காசி

நகரில் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. ஆனால் அச் சபையில் ஒன்றும் முடிவடையாமல் ஸ்பெஷல் காங்கிரஸ் சபையை கூட்டி யோசிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எல்லா பிரமுகர்களும் ஆஜராயிருந்தார்கள். மகாத்மா காந்தியவர்கள் "ஒற்றுழையாமை" என்னும் வழி தான் நம் கஷ்டங்களை நிவர்த்திக்கும் என்று சொன்னவுடன் மற்ற தலைவர்கள் கொஞ்சம் தயங்கலானார்கள். இப்பெரிய பொறுப்பை தாங்கள் வகிக்காமல் தேச மகா ஜனங்களின் மீது சுமற்றி முடிவுபண்ணுவது உசிதமெனக்கருதி ஸ்பெஷல்காங்கிரெஸ் கூடவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஸ்பெஷல் காங்கிரெஸில் விவாதத்திற்கு வரும் விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. மகம்மதியர்கள் ஏராளமாய் வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் வந்து கூடுவார்கள். கிலாபத் சம்பந்தமான ஒற்றுழையாமையை பற்றியும், ஹண்டர் கமிட்டி ரிபோர்ட்டை கண்டித்தும் சென்னை மகாண கான்பரென்ஸ் தீர்மானங்கள் செய்திருக்கின்றது. இவ்விஷயங்களை சரிவர யோசித்து முடிவான தீர்மானங்களுக்கு வரும் பொருட்டு தீர்க்கதர்சியானவரும், மேதாவியுமான ஒரு மஹான் அக்ராஸனம் வகிக்கவேண்டியது அத்யாவசியமாகும்.

இந்த ஸ்பெஷல் காங்கிரெஸுக்கு லோகமான்ய திலகர் அக்கிராஸனம் வகிப்பது தான் உசிதமாகும். ஏனெனில் அவர் தேச மகா ஜனங்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். நெருக்கடியான சமயங்களில் தைரியத்தோடு வழிகாட்டக்கூடியவர் இவரே. ராஜரீக விஷயங்களில் முதிர்ந்த அனுபமுள்ளவராகையாலும், இங்கிலாந்து முதலிய விடங்களுக்குச்சென்று அங்குள்ள ராஜீய இயல்பை நேரில் அறிந்தவரானபடியாலும் அவரையே மாகாண காங்கிரெஸ் கமிட்டிகள் ஸ்பெஷல் காங்கிரெஸுக்கு அக்கிராஸனாதிபதியாகத் தெரிந்தெடுப்பார்களென்று நம்புகிறோம்.

சமாசார குறிப்பு

ஒரு சவரன் பத்து ரூபா.

விளம்பரச் சபையார் நமக்குப் பின் வருமாறு தெரிவிக்கின்றனர்:— அரசாங்கத்தாருக்குக் கிஸ்தி கட்டுவதற்காகவாவது அல்லது கடன் காரர்களுக்குக் கடன் கொடுப்பதற்காகவாவது அல்லது வேறு எக் காரணத்திற்காகவாவது ஜனங்கள் ஒரு சவரனை 15 ரூபாய்க்குச் சமமாக உபயோகித்து வருகிறார்கள். ஆனால் அதை வருகிற ஜூலை மாதம் 12-ந் தேதியிலிருந்து அரசாங்கத்தார் 10 ரூபாய்க்குச் சமமாகச் செய்யக் கருதி யிருக்கிறார்கள். அக்காலத்திலிருந்து ஒரு சவரன் 10 ரூபாய்க்குச் சமமாகும். சவரன்கள் இப்போது வைத்துக் கொண்டிருப்பவர் நஷ்டமடையாமற் படி வருகிற ஜூலை மாதம் 12-ந் தேதிவரையில் கோட்டையில் நாணயச் சாலையில் ஒரு சவரன் 15 ரூபா விகிதம் எடுத்துக் கொள்ளப்படும். அதற்குப் பிறகு 10 ரூபாய்க்குத்தான் எடுத்துக்கொள்ளப்படும். யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதும் இந்தியாவில் பொன்னாகிலும் சவரன்களாகிலும் இறக்குமதி செய்யப்படாதென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. இந்நிபந்தனையை அரசாங்கத்தார் இப்போது எடுத்து விட்டனர். அந்நிய நாடுகளிலிருந்து இப்போது சவரன்களாவது அல்லது பொன்னாவது இந்தியாவில் இறக்குமதி செய்யப்படலாம்.

நாளது மீ 22 தேதி நடந்த எலெக்ஷனில் தஞ்சை முன்சிபாலடி மூன்றாவது வார்டின் காலி கவுன்சிலர் ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் வி. பி. வெங்கட கிருஷ்ணநாயுடு அவர்கள் வோடர்களினால் தெரிந்தெடுக்கப் பட்டார் என்று கேட்க சந்தோஷிக்கிறோம்.

நமது ஜில்லா பதி மூன்றாவது கான்பரென்ஸ் வருகிற ஆகஸ்ட் மாதம் 7. 8. தேதிகளில் பாபநாசத்தில் கூடும். சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசயங்காரவர்கள் அக்கிராஸனம் வகிப்பாரென்று அறிகிறோம்.

நன்னிலம்தாலுகா கிராம உத்தியோகஸ்தர்கள் சபையின் வருஷோத்ஸவ கொண்டாட்டம் ஜூன் மாதம் 27 வயில் நன்னிலம் ஸ்டேஷனுக்கு சமீபத்திலுள்ள சத்திரத்தில் ஸ்ரீமான் வி. பி. இராமசுவாமி அய்யரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நடைபெற்றது. கனம் ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும் ராவ்பகதூர் கெ எஸ் வெங்கடராமய்யரவர்களும் ஆஜராயிருந்தார்கள். நடவடிக்கைகள் பூராவும் தமிழிலேயே நடத்தப்பட்டதென்பதை கேட்க சந்தோஷிக்கிறோம். ஏழைகளாகிய கிராம உத்யோகஸ்தர்களின் மீது கிருபைகூர்ந்து அவர்களின் கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டு கனம் ஸ்ரீமான் சாஸ்திரியாரவர்களும் ஸ்ரீமான் வி. பி. இராமசுவாமி அய்யரவர்களும் உழைப்பார்களென்று நம்புகிறோம்.

தஞ்சையில் ஸ்ரீமான் எஸ். சீனிவாசயங்கார்

(ஒரு நிருபரிடமிருந்து)

சமீபத்தில் திருநெல்வேலியில் கூடிய 26 வது சென்னை மாகாண மகாநாட்டில் தலைமைவகித்து அதனை இனிது நடத்திய கனம் சீனிவாஸய்யங்காரவர்கள் இன்று காலை எக்ஸ்பிரஸில் இவ்வூர் வந்துசேர்ந்தார் ரயில்வேஸ்டேஷனில் இந்நகர் தேசீயசங்கத்தவர்களாலும் பிரபல முகமதியர்களாலும் வரவேற்பட்டனர்.

கோகுலே வாலிபர் சங்கம்

மாலையில் கல்யாண சுந்தரம் ஹைஸ்கூலில் கோகுலே வாலிபர் சங்க ஆதரவில் ஓர்கூட்டம் சமார் 4 மணிக்கு நடைபெற்றது அப்பொழுது கனம் சூரியநாராயணய்யரவர்கள் கனம் சீனிவாஸய்யங்காரவர்களது அரசியல்ஞானம் தேசாபிமானம் முதலியவைகளைப் பற்றித் தெளிவாகச் சிறிதுநேரம் ஆங்கிலத்தில் பேசிவிட்டு கனம் அய்யங்காரவர்களை மேற்கூறிய சங்கஅங்கத்தினர்களுக்கும் ஏனையோர்களுக்கும் சிலபுத்திமதிகளை யெடுத்துக்கூறும்படி வேண்டிக்கொண்டனர்.

கரகோஷங்களிடையே கனம் அய்யங்காரவர்கள் எழுந்து எல்லோருக்கும் தனது வந்தனத்தைக் கூறிப் பின் பேசியதன் சாராம்சம் வருமாறு:—

இன்று, கனவான்களே, நண்பர் சூரியநாராயணய்யரவர்கள் உங்களுக்கு ஏதாவது சில விஷயங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென என்னிடம் சிறிதும் நேரத்திற்கு முன்பாகத் தெரிவித்தார். போதுமான அவகாசம் கொடுக்கப் படவில்லையெனினும் சில விஷயங்களை உங்களுக்குக் கூறுகிறேன். இச்சங்கத்திற்கு நீங்கள் கோகுலே வாலிபச் சங்கமென நாமம் புனைந்தது எனக்குப் பெரும் ஆனந்தத்தைத்தருகிறது. கோபாலகிருஷ்ண காகுலேயவர்கள் இந்தியாவிற்காகப் பாடுபட்டு உழைத்திருப்பதைப்பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை. நீங்களேயறிவீர்கள். பொதுவாக தற்காலத்திய மாணவர்களுக்கும் பண்டைக் காலத்திய மாணவர்களுக்கும் அநேக வித்தியாசங்களிருக்கின்றன. சுருக்கமாகக் கூறின்நாங்கள் அக்காலத்தில் புத்தகங்களில் மாத்திரம் படித்து அனுபோகத்திற்குக் கொண்டுவராதவிஷயங்களையெல்லாம் நீங்கள் அனுபோகத்திற்குக் கொண்டுவந்து விட்டீர்கள். பொது ஜன ஊழியம், பரோபகாரம் முதலியவைகளிலும், மற்றும் பொதுவிஷயங்களிலும் ஊக்கமெடுத்து வருவது மெச்சத் தக்கதே. நான் மாணவனாயிருந்த காலத்திலெல்லாம் ஏதோ அரைகுறையாக எங்களுக்குத் தெரிந்த ஆங்கில பாஷையால் செருக்குற்று மற்றவர்களெல்லோரையும் மூடர்களென்றே கருதிவந்தோம்.

சில சங்கங்கள் பேருக்குமாத்திரமிருக்கின்றதல்லாமல் உண்மையான வேலையொன்றும் செய்து வருகிறதில்லை. வருஷத்திற்கு ஒருதடவை கூட்டங் கூடுவதில் எவ்வித முயற்சிகளும் செய்யப்படாம லிரா அவ்விழா முடிந்ததும், சங்கமிருக்குமிடமே தெரியாமலிருந்து விடும். அங்ஙனம் உங்களது சங்கம் இராதென நம்புகிறேன். உங்களது சங்கங்களில் சிவாஜிசரிதம் ராமர்சரிதம் முதலியவைகளைப் பற்றிய விவாதங்களோ அல்லது உபன்னியாஸங்களோ நடைபெறல் உங்களக்குமேலான அறிவைப்புகட்டுவதல்லாமல் உங்களது மனத்தில் தேசபக்தியைக் குடி கொண்டிருக்கச் செய்யுமென்பதில் ஆக்ஷேபமின்று. இந்து தேசசரித்திரத்தை ஒவ்வொருவரும் நன்கறிந்திருக்கவேண்டும். அதுவுமல்லாமல் உரஸாயன சம்பந்தமான விஷயங்கள் அடிக்கடி விவாதிக்கப்படல் வேண்டும். முதலில் உங்களது எண்ணப்படி விஷயங்கள் தெளிவுபடாமலிருப்பினும் நீங்கள் அதைரியப்படல் கூடாது. ஏதோ உங்களுக்குத் தெரிந்தவரை இவ்விஷயங்களில் பிரையாசையெடுத்துக் கொள்ள வேண்டும். இவைகளால் விளையும் நன்மைகள் பல. தேகாப்பியாஸம் முன். காலத்தை விடதற்போது அதிகமாக நடந்து வரினும் அவ்வளவுதிருப்திகரமாகவிருப்பதாகச் சொல்ல முடியாது. நீங்களெல்லோரும் தேகாப்பியாஸஞ் செய்வதில் விடா முயற்சியெடுத்து உங்களது சரீரங்களை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே எனது கடைசி வேண்டுகோளாகும் என்று பேசி இன்னும் சில விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுத்தனது ஆஸனத்திலமர்ந்தார்.

பிறகு அக்கல்லூரித்தலைவர் கனம் அய்யங்காரவர்களுக்கு வந்தனங்கூறி மாலைசூட்டினர். எல்லோருக்கும் சந்தனம் வெத்திலை பாக்கு வழங்கப்பட்டதும் கூட்டங்கலைந்தது.

நமது தற்கால நிலைமை

சுமார் மாலை 8 மணிக்கு மணிக்கூண்டிற்கருகிலுள்ள மைதானத்தில் ஒரு பொது ஜனக் கூட்டம் கூட்டப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆங்குகுழுமியிருந்தனர் மேற் கூறிய கலியாண சுந்தரம்ஹைஸ்கூலிலிருந்துகனம் சீனிவாஸயங்காரவர்கள்வாத்தியகோஷங்களுடன் மணிக்கூண்டுமைதானத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

கனம் கோதண்டராம அய்யங்காரவர்கள் அக்கிராஸனம் வகித்துக் கூறியதாவது.

சகோதரர்களே.

இன்று இங்கு உங்களது முன்னிலையில் இவ்வளவு விமரிசையுடன் அழைத்து வரப்பட்ட கனம் அய்யங்காரவர்களை உங்களில் நேகர் நேரிற்பார்த்திராவினும் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருப்பீர்களென்பதில் ஐயமில்லை. அவர் வக்கீல் தொழிலில் சென்னையில் முதன்மையாயிருந்து வந்தகாலத்த்து அரசாங்கத்தார் இல்விலையிலா மாணிக்கத்தை விலை கொடுத்து வாங்குவது போல் அன்னாருக்கு அட்வகேட் ஜெனரல் எனும் உன்னத உத்தியோகத்தை யளித்தனர். எக்காரணம் பற்றியோ இவர்களும் நிராகரிக்காமல் ஒப்புக் கொண்டனர்.

அக்காலங்களில் இவர்களது அரசியல் ஞானமும் பிறவும் குடத்திலிட்ட விளக்கை யொத்திருந்தது எனினும் தேசத்திற்கு தன்னாற் செய்யக்கூடியவரை அனேக விதங்களில் உதவி செய்து வந்திருக்கிறார். ஆனால் அவைகள்வெளிக்குத்தெரியாதனவாயிருந்தன. சிறிது காலத்திற்கு முன்னர் நம் பாரத மாதாவின் சேவையை முன்னிட்டு தனது பதவியை ராஜீனாமாச் செய்து காங்கிரஸ் எனும இந்திய மகா ஜன சபையின் கொள்கையைத்தழுவி, இந்தியாவின் முன்னேற்றத்திற்கான வழிகளில் உழைத்து வருகிறார். தேச ஊழியத்திற்காகத் தனது உடல் பொருளாவி எனும் முப்பொருளையும் அர்ப்பணஞ் செய்திருக்கிறாரென்றே சொல்லலாம். என்று கூறி அன்னார் “நமது தற்கால நிலமை” எனும் விஷயமாக உங்களுக்குச் சில விஷயங்களை எடுத்துக் கூறுவார் என்று தெரிவித்துத் தனது ஆசனத்திலுட்கார்ந்தார்.

கனம் சீனிவாஸய்யங்காரவர்கள் பேசியதின் சுருக்கம். சகோதரர்களே.

நான் தமிழில் அதிகத் தேர்ச்சியில்லாதவன் அப்படிப்பட்ட நான் தமிழில் பேசுவது சிரம சாத்தியமே. எனதுநண்பர் சத்தியமூர்த்தி முதலியோர் சென்னையிலிருந்து இவிடம் வந்து உங்களுக்கு சீர்திருத்தம், காங்கிரஸ் முதலியவற்றைப் பற்றி யுபதேசித்துள்ளார்கள். இவ்வூரிலுள்ள நண்பர்களும் உங்களுக்குத் தமிழிலேயே பேசி வந்திருக்கின்றனர். நானும் இனி நன்றாகத் தமிழ் கற்று சிறிது காலத்திற்குள் தமிழிலேயே உபன்யாஸஞ் செய்ய சக்தியுள்ளவனாக விருப்பேனென்றெண்ணுகிறேன். எப்படியிருப்பினும் இன்று கூடியவரை தமிழிலேயே பேச முயற்சி செய்கிறேன். தற்காலம்அரசியல் விஷயங்களில் நான்உங்களுக்கு ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நீங்கள் பல தலைவர்களது பிரசங்க மூலமாகவும் தேசபக்தன் சுதேசமித்திரன் முதலிய சுதேச பாஷாப் பத்திரிகைகள் வாயிலாகவும் போதுமான அளவு கற்றிருக்கிறீர்கள். சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் ஜனங்கள் இருந்த நிலைமையில் தற்போதில்லை. இப்பொழுது ஜனங்கள் தங்களது குறைகளைத் தாங்களே நேரில் தெரிவித்துப் பரிகாரம் தேடக் கூடிய நிலைமையடைந்து விட்டனர். அக்காலங்களிலப்படியல்ல.

தற்காலம் ஏற்பட்டுள்ள கட்சிகளைப் பற்றிச் சிறிது சொல்லவிரும்புகிறேன். மிதவாதிகள் அமிதவாதிகள் என இருகட்சிகளேற்பட்டிருக்கின்றன. அமிதவாதிகள் என்று சொல்வது அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை; அது போலவே மிதவாதிகள் என்னும் பதமும். மிதவாதிகளை, ,, பொறுங்கள் பொறுங்கள், வரட்டும் வரட்டும், ” என்றுசொல்லுகிறவர்களென்றாவது “அல்லதுமெள்ள நடப்பவர்கள் என்றாவது சொல்லுதல்பொருந்தும்.” அமிதவாதிகளை சீக்கிரம் செல்லுகிறவர்கள அல்லது நியாயத்தையும்சத்தியத்தையும் பேசுகிறவர்கள் என்று சொல்லுதல் பொருந்தும்.

காங்கிரஸ் எனும் இந்திய மகாஜன சபை சென்ற 30 வருஷகாலமாக நம் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறது. இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சீர்திருத்தத்தை நம் காங்கிரஸ் இத்தனை வருஷங்களாகப் பாடுபட்டு வந்த தன் பலனென்றே சொல்லவேண்டும். புதிதாக நமக்கு வழங்கப்பட்டிருக்கும் சீர்திருத்தத்தின்படி சட்ட சபைக்கு அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அப்பொழுது நீங்களெல்லோரும் உங்களது வோட்டுகளை மேற்கூறிய காங்கிரஸ் மகா சபையின் கொள்கைகளை ஆதரிப்பவர்களுக்கே கொடுக்கவேண்டும். அவர்களே உண்மையான ஜனப்பிரதி நிதிகளாவார்கள். என்று சொல்லி, முடித்ததும் மழை வருஷிக்கத் தொடங்கியது அதனால் கூட்டம் கலையநேரிட்டது. இல்லையேல் கூட்டம் இன்னும் சிறிது நேரம் நடை பெற்றிருக்கும்.

தலைவர்களது விஜயம்

வரும் ஜூலைமாதம் 3 தேதி சனிக்கிழமை காலையில் திருக்குற்றாலத்தினின்றும் சென்னை ஹிந்து பத்திராதிபர் ஸ்ரீமான் S. கஸ்தூரி ரெங்கய்யங்காரவர்களும் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தியயரவர்களும் தஞ்சைக்கு விஜயஞ் செய்வார்கள். அன்று மாலையில் ராஜீய விஷயங்களைக் குறித்து உபந்நியாசஞ் செய்வார்கள்.

வியாஸபூஜை.

கும்பகோணத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் 68 வது ஆசார்யாளாக அபிஷிக்தாளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் விஜய யாத்திரையாகப் புறப்பட்டு அநேக தீர்த்தாடன க்ஷேத்திராடனங்களை செய்துகொண்டு ரௌத்திரி வூ ஆனி மாதம் 18உ ஆஷாட சுத்த பூர்ணமை 1-7-20 குருவாரத்தன்று நடத்தவேண்டிய வியாஸ பூஜா மகோத்ஸவ சாதுர்மாஸ்யஸங்கல்பங்களையும் அது முதல் நடக்கும் வித்வத்ஸதஸ் முதலானவைகளையும் மாயவரம் அசேஷ வித்வத் மகாஜனங்கள் முதலிய சிஷ்ய கோடிகளுடைய பிரார்த்தனானுஸாரமாய் மாயூர் க்ஷேத்திரத்தில் நடத்துவதாக நிச்சயத்திருக்கிறபடியால் ஸ்ரீ மடத்திற்கு முக்கிய சிஷ்யர்களாகவும் குரு பக்தியார்களாகவும் இருக்கிற அசேஷ வித்வன் மஹா ஜனங்கள் முதலான ஸகலரும் வந்து ஷை சாதுர்மாஸ்யப் பிரயுக்தமாய் நடத்த வேண்டிய ஸ்ரீ ஸ்வாமி பூஜா பிரும்மண ஸந்தர்ப்பணாதிகளையும் அதுமுதல் நடக்கும் வித்வத்ஸதஸ் முதலான மகோத்ஸவத்தையும் விமர்சையாய் நடத்தி வைத்து வியாஸாநுக்ஷதப்பிரஸாதம் பெற்று ஐஹிதகாமுஷ்மித பலன்களை அடையவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உள் நாட்டு சமாசாரங்கள்.

பம்பாய் சுய ஆட்சி சங்கம், நாஷனல் யூனியன் இவைகளின் ஆதரவில் சென்ற சனிக்கிழமை கோகுல் தாஸ் மண்டபத்தில் ஒரு மகா நாடு கூடிற்று. மிஸ்டர் எம். ஏ ஜின்னா அக்கிராசனம் வகித்தார். ஹண்டர் கமிட்டி மெஜாரிட்டி ரிபோர்ட்டை கண்டித்தும் ரௌலட் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் ஸர்மைகேல் ஒட்வயருக்கு உத்தியோகமொன்றும் கொடுக்ககூடாதென்றும் ராஜபிரதிநிதியை ஊருக்கு அழைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஜெனரல் டயர், கர்னல் ஜான்ஸன் முதலியவர்கள் கொலைக்குற்றஞ் செய்ததாக தெரிவதால் அவர்களை கோர்ட்டில் முன்னிருத்தி விசாரிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. மீட்டிங்கில் மகாத்மா காந்தி, பண்டிதமாளவியா மௌலனா ஷவுகத் ஆலி முதலியவர்கள் பிரசன்னமாயிருந்து தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார்கள்.

சிதம்பரத்தில் புதிதாக எற்படும் ஸ்ரீ மீனாட்சிகலாசாலையை இம்மாதம் 26ந் தேதி கல்வி இலாகாத் தலைவர் கனம் மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் திறந்துவைத்தார்.

சென்னை கிராமப் பஞ்சாயத்து மசோதாவும் சென்னை லோகல் போர்டுஸ் மசோதாவும் சட்டம் செய்யப்படுவதற்கு இவ்வாரத்திய கெஜட்டில் வெளியாயிருக்கின்றன.

சென்னை மாகாணத்திலுள்ள தொழிலாளர்களின் நிலையைப்பற்றியும், தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் விஜாரித்து அறிவிக்க சென்னைக் கவர்ன்மெண்டார் ஒரு விசாரணைக் கமிட்டி எற்படுத்தப் போவதாகத்தெரிகிறது.

மகாத்மா காந்தி இம்மாதம் 24ந் தேதி கிலாபத் விஷயமாக இராஜப் பிரதிநிதிக்கு ஒரு நீண்டகடிதம் எழுதி அதில் கிலாபத் விஷயத்தையும், இந்து முஸ்லீம்கள் செய்யவேண்டிய கடமைகளையும் விளக்கியிருக்கிறார். மேலும் கிலாபத் விஷயம் முஸ்லீம்கள் விருப்பப்படி முடிவுசெய்யப்படாமலிருந்தால், இந்து முஸ்லீம்கள் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்காமலிருக்க நேரிடுமென்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பம்பாய் மத்திய கிலாபத் கமிட்டியார் இராஜப் பிரதிநிதிக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார். அதிலும் கிலாபத் விஷயம் திருப்திகரமாக முடிவு செய்யப்படாமற் போனால் ஆகஸ்டு மாதம்முதல் தேதியிலிருந்து இந்து முஸ்லிம்கள்

கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்க முடியாதென்று அறிவித்திருக்கின்றனர். இந்த விண்ணப்பத்தில் எண்பது ஸுன்னத் முஸ்லீம்கள் கையொப்பம் செய்திருக்கிறார்கள்.

பஞ்சாப் படுகொலை விஷயமாக விசாரணை செய்துள்ள ஹண்டர் கமிட்டியார் பட்சபாதமாக ரிபோர்ட் வெளியிட்டிருப்பதையும் பஞ்சாப் அதிக்கிரமங்களுக்குக் காரணர்களாயிருந்தவர்கள் இன்னும் உத்தியோகத்திலிருப்பதையும் முன்னிட்டு லாலா லஜபதிராய சீர்திருத்த பஞ்சாப் சட்டசபைக்குப் பிரதிநிதிகள் அபேட்சகர்களாக விருக்கக் கூடாதென்று வற்புறுத்துகிறார்.

பம்பாயில் காலரா ஒழிந்துவிட்டமையால், இனி ஹாஜ்யாத்திரிகள் இம்மாகாணத்தைவிட்டுத் தாராளமாய்ப் போகலாமென்று பம்பாய் செய்தி கூறுகிறது.

ஸ்ரீ காசி இந்து சர்வகலாசாலைக்குப் பணம் வேண்டுமென்று இவ்வாரத்தில் பண்டிதர் மதன் மோகன் மாளவ்வியா பம்பாயில் உபந்நியாசம் செய்தார். அதன் பயனாக ஒரு தினத்தில் எழு லட்ச ரூபாய்வசூலாகியது.

கிலாபத் விஷயமாய் நேசக் கட்சியார் விதித்திருக்கும் நிபந்தனைகளை ஆட்சேபித்து கீழ்கண்ட உத்தமர்கள் தங்கள் பதவிகளையும் பட்டங்களையும் வெறுத்திருப்பதாக மகமடன் என்னும் பத்திரிகை கூறுகிறது (11) ஸிந்துநகரவாசியாகிய ஜனாப் ஸையத் முகமத் இஸ்மேல் சாகிப் ஸி. ஐ டி. இன்ஸ்பெக்டர் வேலையை வெறுத்தார் (2) ரிஸ் ஜான் முகமத் சாகிப் என்றஸிந்து நகரபாரிஸ்டர் அவ்வுத்தியோகத்தையும் ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்தானம் முனிஸிபல் கமிஷனர் ஸ்தானம் முதலியவைகளையும் வேண்டா மென்று ராஜீநாமா செய்து விட்டார்.

ஜாகோபாத் வாசியாகிய ஸர்தார் வட இந்தியாவிலுள்ள முகம்மத் ஸயத் கான்சாகிப் தமக்குத் தாபார் ஸ்தானம் வேண்டியதில்லை யென்றும் ரிஸ் மீர் முகம்மத் சாகிப் லோகல் போர்டு மெம்பர் ஸ்தானம் வேண்டாமென்றும் வெறுத்து விட்டார் பிறகு ஸிந்து தேசத்தில் நான்கு கான்ஸ்டேபில்களும் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஒரு ஓவர் ஸியரும் மற்றும் 15 குமாஸ்தாக்களும் தத்தம் பதவிகளை ராஜி நாமாசெய்து விட்டார்கள்.

கேகய முத்தூர் சேலம் திரிச்சி மதுரை போன்ற விடங்களில் வணிக சங்கம் ஏற்பட வேண்டுமென்றும் அவ்வகுப்பினர் விருத்தியடைவதற்கு வணிக் குலாபிமானிகள் வேலை செய்ய வேண்டுமென்றும் ஒருவணிக நிருபர் எழுதுகிறார்.

தஞ்சை ஹைகோர்ட் வக்கீலான ஸ்ரீமான் உமாமகேசவரம் பிள்ளை தஞ்சை ஜில்லா போர்ட்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் எஸ். சாரங்கபாணி ஐயங்கார் தஞ்சை தாலூகா போர்ட்டு வைஸ் பிரஸிடெண்டாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாஸய்யர் மன்னார்குடி தாலூக்கா போர்ட்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் வி. எம். கந்தசாமி தேசிகர் நாகப்பட்டினம் தாலூகா போர்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் பி. இராமசந்திர ஐயர் கும்பகோணம் முனிஸிபல் கவுன்ஸிலராய் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

வெளிநாட்டு ஸமாசாரம்.

துருக்கி கவர்ன்மெண்டார் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சமாதான உடன்படிக்கையை இன்னும் ஆலோசனைசெய்ய சாவகாசம்வேண்டுமென்று கேட்டதாகவும், அதற்கு நேசக்கட்சியினர் மறுத்துவிட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

துருக்கி சமாதான உடன்படிக்கை முஸ்லீம்கள் விரும்பியவண்ணம் திருத்தியமைக்கப்படாமற்போனால், இந்தியத் துருப்புகளில் கலகமுண்டாகுமென்று பிரிட்டிஷ் தொழிலாளர் மகா நாட்டில் ஜனாப் முகம்மதலி கூறியிருக்கிறார்.

பார்லிமெண்டில் மாஜி கெய்சரைப்பற்றி ஒரு கேள்விபிறந்தது. அப்போது மாஜி கெய்சர் தூக்கிலிடப்படுவார் என்ற விஷயமென்னவாயிற்றென்று கேட்க மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் "கெய்சரை நாங்கள் விட்டபாடில்லை" யென்று பதிலளித்தார்.

விவசாய அபிவிருத்தி

சென்ற 3 வருஷங்களாக சண்டையின் காரணமாகவும் வெள்ளச் சேதத்தினாலும் உலகத்தில் உணவுப பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விலைகள் ஏறின. கவர்மெண்டாரும் உணவுப் பொருள்களை விருத்தியாக்க எவ்வளவோ பாடுபட்டுவருகிறார்கள். புஞ்சைஉணவுதானியங்களை அதிகமாய் சாகுபடி செய்யவேண்டியதின் பொருட்டு கைப்பற்றப்படாத தீர்வைபட்டகவர்ன்மெண்டு பூமியில் புஞ்சை ஆகாரதானியங்கள் சாகுபடி செய்தவர்களிடமிருந்து தீர்வை வசூல்செய்யப்படுகிறதில்லையென்று பிரசுரஞ்செய்கிறார்கள். உணவுப்பொருள்களை அதிகப்படுத்த வேண்டியதற்காக விவசாய டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்கள் பலரை நியமித்து ரசாயனஎரு விற்கும்படி செய்திருக்கிறதுடன் பொருக்கிற ஏகப்பட்ட விதையையும் கேழ்க்கும் மிராசுதார்களுக்கு விற்றும் வருகிறார்கள். இக்காலத்தில் நெல் சாகுபடியில் ஒற்றைநாற்று நடுகையினால் கண்டுமுதல் ஜாஸ்தியென்றும் விதை சிலவுக் குறைச்சலென்றும் என்னைப் போன்ற விவசாயிகள் நன்கறிந்திருக்கிறார்கள். ஆனால் என் அனுபவத்தில் ஒற்றை நாற்றுகள் வேர்கள் ஆழத்தில் ஓடி பூமியில் இருக்கப்பட்ட வித்தை ஜாஸ்தி உட்கொள்ளுவதினால் பூமியின் சாரம்பயிற்சிக்கு உணவாகிவிடுகிறது. ஆகவே பூமிக்கு மறுபடியும் உரம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. எருசெய்வது தான் செய்யமாட்டான் என்பது யாவருமறிந்த விஷயம். விறகு பரிசத்தினால் மாட்டுசாணம் முட்டையாக தட்டப் பட்டு பட்டணங்களில் விற்கப் படுகிறது ஆதலால்தான் எரு சேகரமாவதில்லை. மரங்கள் ஜாஸ்தியாக வெட்டுப் பட்டு விடுவதால் தழை எருவும் அகப்படுவதில்லை. பசந்துடன் பயிர்கள் உற்பத்தி செய்தாலும் மாடுகள் தின்னாமல் காபந்து செய்வது அசாத்தியமாகிவிடுகிறது. சில வருஷங்களுக்கு முன் ஆறுகளில் வண்டல் வந்து பாய்வதுபோல் இப்போதில்லை. பல விடங்களில ரெகுலேடர்களும் கட்டடங்களும் கட்டி தண்ணியைத் தேக்குவதினால் தெளிந்த ஜலமே பாய்கிறது. ஆனால்வெள்ள காலத்தில் எல்லா பலகைகளையும்திறந்துவிடும்போது வண்டல்கள் சமுத்திரத்திற்கு அடித்துக்கொண்டு போகப்பட்டு வருக்கிறது. இது விஷயத்தில் நான் இன்ஜினியரிங் டிபார்ட்மெண்டார்மேல்குறைகூறுவதாக எண்ணக்கூடாது. நம்முடைய ஜில்லாவிலுள்ள நிலங்களை நிபுணர்களால்கவர்ன்மெண்டார் பரீட்சித்துப் பார்த்ததில் பிரகாச சத்து குறைவாக இருக்கிறதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிண்ணாக்கிலும் எலும்புத் துண்டங்களிலும் பிரகாச சத்துக்கள் ஜாஸ்தியிருக்கிறதென்றும் அவைகளை நெல்சாகுபடி ஆகும் நிலங்களுக்கு உரமாக இடும் பட்சத்தில் நெல் கண்டுமுதல் ஜாஸ்தியாக ஏற்படுகிறதென்றும்பரிட்சார்த்தத்தில் தெரிந்திருக்கிறது. நம்முடைய ஜில்லாவில் ஏராளமான கால்நடைகள் சாகிறது யாவரும் தெரிந்துகொண்டது தான். ஒவ்வொரு ரயில் ஸ்டேஷன்களிலும் விற்றுமதியாகும் தோலினாலும் குவிக்கப்பட்டிருக்கும் எலும்பு குவியல்களினாலும் எவ்வளவு கால்நடைகள் சாகிறதென்று நன்குவிளங்கும். இந்த ஜில்லாவிலிருந்து நொருக்கப்படாமல் கட்டையும் முட்டையுமாக ஜாஸ்தியான ரயில் சார்ஜ் செலுத்தி தூத்துக்குடி மார்க்கமாக கொழும்புக்கும் அக்கரை தலங்களுக்கும் எலும்புகள் ஏற்றப்பட்டு வருகிறது. அப்படிக் கொண்டுபோகப்படும் எலும்புகளை யந்திரங்களைக்கொண்டு நொறுக்கி திராவகங்கள் கலந்து எருவாக்குகிறார்கள். அயல் நாட்டார் இவ்விதம் நமக்கு முக்கியமாய் நம்முடைய வீட்டின் கொல்லையில் கிடைக்கக்கூடிய எருவை நம்முடைய முட்டாள் தனத்தினால் வாரிக்கொண்டுபோகும்படி விட்டு ஏமாந்து நிற்கிறோம்.

கவர்ன்மெண்டார் மங்கநல்லூரில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தி நூதன முறைகளை அனுஷ்டித்துக் காட்டுவதுமன்றி விவசாயிகளுக்கு விதையும் கொடுத்து ஒத்தாசை செய்துவருகிறார்கள். நம்முடைய ஜில்லாவில் கிடைக்கக்கூடிய எலும்புகளை ஜில்லாவைவிட்டு வெளிப்போகாமல் தடுத்து கவர்ன்மெண்டு விவசாயப் பண்ணையில் எலும்பு நொறுக்கும் யந்திரங்கள் ஏற்படுத்தி நொறுக்கிவிவசாயிகளுக்கு அவர்களுடைய நில விஸ்தீரணத்துக்குத் தகுந்தபடி லாபமின்றி ஏன் விற்கக்கூடாது? அதன்படி தொழிற்சாலை யேற்படுத்த ரூபாய் 10,000 பதினாயிரத்துக்கு மேல் செல்லாது. இப்படி பரிட்சார்த்தமாய் சுமார் 4 அல்லது 5 வருஷத்திற்கு செய்து காட்டினால் பிந்தி மிராசுதார்களில் பலர் சேர்ந்து கோவாபரேடிவ் சங்கமாகவாவது அல்லது ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பெனியாகவாவது ஏற்படுத்தி ஷை தொழில் நடத்த முன் வருவார்கள். கவர்ன்மெண்டார் மேலே சொல்லப்பட்ட தொழில்சாலை யேற்படுத்தி யந்திரங்கள் வைத்து வேலை செய்ய முன் வந்தால் நானே 4 ல் 1 பாகம் முதல் கொடுக்க முன்வருவேன். என்னைப்போன்ற பல மிராசுதார்களும் இதில் அக்கரையுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். கைத்தொழில் டிபார்ட்மெண்டாரை இது விஷயமாய் ஏதாவது கேட்டால் முதலில் 10 ரூபாய் பீசு கொடு என்கிறார்கள். அப்புறம் யந்திர ஸ்தாபனம் செய்வதற்கு 100 க்கு 5 வீதம் கமிஷன் கேட்கிறார்கள். சரியாக நடக்குமோ, புதிதாக ஏற்படுகிற தொழிலாச்சே, இந்தியாவில் தெரிந்தவர்களில்லையே, யந்திரங்களை வரவழைத்து நஷ்டமடைந்தால் என்செய்வதென்று முழித்துக்கொண்டிருக்கும் இந்தியர்களுக்கு இந்திய சாகுபடிக்கு உற்றதாயும் அதிக பலன் தரக்கூடியதாயுமுள்ள நிலத்தை வளப்படுத்தக்கூடியதுமான எருவை சேகரிக்கும் தொழில் நடத்திக்காட்டி தொழிலபிவிருத்தியிலும் விவசாய அபிவிருத்தியிலும் ஊக்கத்தை உண்டுபண்ணாமல் பத்திரிகைகளிலும் Publicity Bureau. மூலமாக துண்டு பத்திரிகைகளிலும் மட்டும் வியாசங்கள் எழுதிவந்தால மட்டும் உணவுப் பொருள்களை அதிகமாய் விளைக்கவும் நிலத்தில் ஜாஸ்தியான கண்டுமுதல் செய்யவும் கூடாதான காரியம். உணவுப்பொருள்களை அதிகப்படுத்த முயற்சிக்கும் விஷயத்தில் எவ்வளவோ விதமாய் செய்யக்கூடிய சங்கதியை விரித்தெழுதலாம். ஆனால் முக்கியமாயும் கூடிய சீக்கிரத்தில் செய்யவேண்டியதுமான முயற்சி ஒன்றைமட்டும் எடுத்து எழுதி இத்துடன் முடித்துவிட்டேன்.

நாகப்பட்டணம் 18—6—20. } ராவ்பகதூர். K. S. வேங்கட்டராமய்யர்.

26வது சென்னை மாகாண மகா நாடு

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்காரின் அக்கிராசனப் பிரசங்கம்.

சகோதரப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே! பெருமான்களே!

சென்னை மாகாண கான்பரன்ஸின் இவ்வருஷத்திய கூட்டத்திற்கு என்னை அக்கிராசனாதிபதியாய் வரித்து, இவ்வளவு தூரம் கௌரவப் படுத்தியதற்கு, நான் மிகுதியும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அரசியல் சட்டம் நிறைவேறியபின்பு கூடும் முதலாவது மகாநாடு இதுவே யாகையால், இம் மகாநாடு பலவிஷயங்களில் முக்கியமானதாகும். இனி அமைக்கப்படப் போகும் சட்ட சபைகளின் அமைப்பிலும் வேலைகளிலும் காங்கிரஸ் மகா சபையை பின்பற்றியவர்கள் எந்த முறையைக் கைக்கொள்ளவேண்டுமென்பதைப்பற்றி முடிவான வழியை அமைத்துக் கொடுப்பது இம் மகா நாட்டின் கடமையாதலால், இத்தகைய கூட்டத்தில் என்னை அக்கிராசனம் வகிக்கச் சொன்னதின் கௌரவத்தை மிகவும் பெரிதாக நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட சௌரவத்தைப் பெறும்படியான எவ்வித வேலையும் நான் செய்துவிடவில்லை, அதுவும் எனது உத்தம குருமூர்த்தியான ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயர் பல வருஷத்துக்குமுந்தி இதேயிடத்திவ் அக்கிராசனம் வகித்திருந்ததை நினைக்கும்போது, எனக்கு உண்மையில் இப் பதவியை வகிக்க சங்கோஜமாகவேயிருக்கிறது. ஆயினும் உங்களுடைய ஆக்ஞைக்குக் கீழ்படிந்து நடக்க நான் கடமைப்பட்டவன். நமது தலைவர்களோடு நெருங்கிப்பழகவும், ஜனங்களின் மனதில் துடித்துக்கொண்டிருக்கும் முக்கியமான பிரச்னைகளைக் குறித்து அன்னாருடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளவும், இம்மாதிரியான சந்தர்ப்பம் எனக்கேற்பட்டதுபற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீங்கள் எனக்குச் செய்யும் கௌரவம் எப்படிப்பட்டதென்பதை நான் அறிவேன். உங்களுடைய உதவியையும், உங்களுடைய ஆதரவையுங்கொண்டு இம் மகாநாட்டின் நடவடிக்கைகளை இனிது நிறைவேற்றிவைக்க முடியுமென்றும் நம்புகிறேன்.

ஆகஸ்டு அறிக்கையும் அரைகுறையான திருத்தமும்.

1915-ம் வருஷம் இந்துதேச சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பித்ததென்று சொல்லலாம். மகத்தான ஒரு சம்பவம் அவ் வருஷத்தில் நடந்தது. காங்கிரஸ் மகா சபையும். முஸ்லீம்லீக்கும் இடைவிடாமல் கிளர்ச்சி செய்ததின் பலனாகவும், இந்திய ராஜீயவாதிகள் ஒற்றுமையானபோராட்டத்தின்காரணமாயும், 1917ம் வருஷம் ஆகஸ்டு 20-தேதி ஒரு பகிரங்க அறிக்கை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் பல சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் எதிரிடையாய்க்கிளர்ச்சி செய்தார்கள் இந்தியாமந்திரியும்ராஜப்பிரதிநிதியும் சேர்ந்து தயாரித்த சீர்திருத்தப் பிரேரணைகள் சிறிதும் திருப்தி தரவில்லை. மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு வந்து போனபின், காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டுவிட்டது. கியாதியும் திறமையும் வாய்ந்த ஒரு கூட்டத்தார், காங்கிரஸிலிருந்து பகிரங்கமாய்ப் பிரிந்து விட்டார்கள். மிஸ்டர் மாண்டேகுவின் உபாயமான திட்டத்தை அவர்கள் உற்சாகமாய் ஆதரிக்கலானார்கள். காங்கிரஸ் தூதர்கள் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோதுகூட அதே கட்சியை அவர்கள் வற்புறுத்தவும் செய்தனர். இங்கிலாந்தில் எல்லாக் கட்சியாரும் ஒரு முகமாய் நிற்கத் தவறியதினால் தான், முடிவான அரசியல் திட்டம் அவ்வளவு மோசமாய்ப் போய்விட்டதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

அச் சட்டத்தின் பூர்வபீடிகை எப்படியிருந்தபோதிலும், அதன் இதர பாகங்களை ஒருவன் வாசிக்கும்போது, இந்தியர் பூரா சுயஆட்சிக்கும் லாயக்கானவர்கள் தானென்று அவர்களே ஒப்புக்கொள்வதுபோல்ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றது. மாகாணங்களில் இரட்டை கவர்ன்மெண்டுக் ஸ்தாபிப்பதென்ற முறையை அமுலுக்கு கொண்டுவந்து, பிறகொரு காலத்தில் ஜவாப்தாரியான ஆட்சி ஏற்படுமாறு உழைப்பதைக் காட்டிலும், பூரா சுயஆட்சி கிடைத்தபின் உழைப்பதற்கு அவ்வளவு சக்தியும் அவ்வளவு சிரமமும் வேண்டியிருக்காது. சுயேச்சையென்ற உணர்ச்சி உலகெங்கனும் தோன்றியிருப்பதுபோல் ஆசியாக்கண்டத்திலும் இப்போது தோன்றிவிட்டது. இதர நாடுகளைப்போல் சுய ஆட்சி பெற்று ஸுகஜீவனம் செய்ய, படித்த இந்தியர் ஸகஜமாய் ஆசைப்படுகிறார்கள். இத்தகைய ஆழ்ந்த ஆசை படித்த இந்தியருக்குண்டென்பதை இந்தியா மந்திரிகூட ஒப்புக்கொண்டிருக்கிறார். சுயேச்சைக்காக நாம் சட்டதிட்டத்துக் கடங்கிச் செய்து வந்திருக்கும் கிளர்ச்சியின் உக்கிரத்தையும், அளவையும், வேகத்தையும், அழுத்தத்தையும், நாள்பட்ட தன்மையையும், கண்ணிருப்போர் பார்த்திருப்பர்; நெஞ்சுள்ளவர் உணர்ந்திருப்பர்; புத்தியுள்ளோர் நினைத்திருப்பர்; பிரிட்டிஷ் ஸாம் ராஜ்யத்திற்குள்ளடங்கி சுயஆட்சி செய்துகொள்ள நமக்குத் திறமையுண்டென்பதை நிச்சயம் அறிந்திருப்பர்.

அரசியல் சட்டம் எப்படியிருந்தபோதிலும் சரி, ஜனநாயக உணர்ச்சியும் பிரமார்த்திக சக்தியும் தேசத்தில் வேகமாய்த்தோன்றி வருவதையே நான் முக்யமான சம்பவமாகக் கருதுகிறேன். ஒரு புதிய வேகம் எங்கும் பரவிவருகிறது. பலமும் தைரியமும் சுயயேச்சை யுணர்ச்சியும், நமக்குச் சொந்தமாய்ப் போய்விட்டன. அக்குணங்களை இனியாரிடத்திலிருந்தும் நாம் அடையத் தேவையில்லை. தேசாபிமான உணர்ச்சியோ நாடெங்கணும் வலுத்துவருகிறது. தியாகத்துக்கு ஜனங்கள் அஞ்சுவதில்லை, கேவலம் உற்சாக புருஷர்களாய் இருந்தவர்கூட திடமான வேலையில் இப்போது இறங்கிவருகின்றனர். ஓர் உத்தியோகத்தையோ வரும்படியையோ உத்தேசித்து ராஜீய வாதம் செய்துவந்த காலம் மலையேறிவிட்டது. வெறும் பேச்சில்திருப்தியடைந்து வந்த காலமும் கழிந்துபோய்விட்டது. வீரத்தோடும் உறுதியாயும் வாதம் புரியுங் காலம் வந்துவிட்டது. ராஜீய வாதம் நமது வாழ்விலேயே ஒரு நித்தியக் கடமையாய் போய்விட்டது. எல்லாக் காரியங்களையும்விட முக்யமான காரியம் அதுதான். காரியத்தில் நடக்கக்கூடிய விஷயங்களிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, ராஜீய ஞானத்தை பொது ஜனங்களுக்கு ஊட்டி, இடைவிடாமல் கிளர்ச்சி நடத்தி, தேசிய விஷயங்கள் யாவற்றிலும் ஒப்புயர்வற்ற ஊக்கத்துடன் சம்பந்தப்படக்கூடிய ஒரு கூட்டப் புண்யபுருஷர்கள் நம் தேசத்தில் உதித்து விட்டார்கள். படித்த வகுப்பினருக்கு மட்டும் ராஜீய ஞானம் இருந்துவந்த காலம் இப்போதில்லை. ஜனத்திரளுக்கும் அவ்வறிவை ஊட்டியாய்விட்டது. இவ்வளவும் எவ்வளவு சீக்கிரத்தில் நடந்திருக்கிறதென்பதையும் கவனிக்கவேண்டும். யுத்தத்துக்கு முந்தி இல்லாத புத்தியும், காணாத உணர்ச்சியும், கேட்காத வாதமும், இபபோது தேசத்தில் தோன்றி விட்டனவாவென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சந்தேகப்படக்கூடாது. வாஸ்தவத்தில் பழைய பேச்சும், அசட்டுத் தந்திரமும், பயனற்ற வாதமும் இப்போது போனவிடந்தெரியவில்லை. பலர் இதைக்கண்டு உண்மையில் ஆச்சரியப்படுகிறார்கள். இத்தனை சீக்கிரத்தில் இவ்வளவுதூரம் நடந்துவிடுமாவென்றுசிலர் கேட்கிறார்கள். வேறு சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். ஒருநெருக்கடியான சமயத்தில்காங்கிரஸ் மகா சபையை விட்டோடிச் சென்ற பிரபலஸ்தர்களுக்கு காங்கிரஸ்மகாசபையில் இப்போது கொஞ்சமும் செல்வாக்கில்லை. பொதுக் கூட்டங்களில் அன்னாருடைய பிரசங்கங்களைக் கேட்பாரில்லை. இதையெல்லாங்கண்டு ஆச்சரியப்படவும் நியாயமில்லை. ஆனால் பழையகாங்கிரஸ் தலைவர்கள்பூராவும் மறைந்துவிட்டதாக நினைக்கக் கூடாது. ஸ்ரீமான் திலகர், காந்தி, லஜபதிராய், மாளவியா ஜின்னா, ஹஸன் இமாம், மஸ்ஹருல்ஹக், யாகுப் ஹஸன், ஸி, ஆர், தாஸ், நேரு, விஜய ராகவாசாரியார், சர்மா, கஸ்தூரிரங்கய்யங்கார், மாதவராவ் முதலிய தலைவர்கள் இன்னும் இருக்கிறார்கள். மகா நெருக்கடியான சமயங்களில கூட தேசியப் பத்திரிகைகளும் முஸ்லீம் பத்திரிகைகளும் தங்கள் கடமையைச் செய்யத் தயங்கினதில்லை? இத்தகைய பத்திரிகைகளைக் கண்டு எத்தேசமும் பெருமையடையலாம். தேச பாஷைப் பத்திரிகைகள் இம் மாகாணத்தில் செய்துவரும் ஊழியம் சாமான்யமானதன்று.

ஹிந்து பத்திரிகையும் அதன்பிரபல ஆசிரியரும் இப்பாரத நாட்டுக்கு ஒப்பற்ற ஊழியம் செய்துவருவதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

இந்திய அரசியல் சட்டம்.

பல முக்கியமான விஷயங்களைப்பற்றி இம் மகாநாடு ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. சீர்திருத்தச் சட்டம் அவற்றில் முக்கியமான தொன்றாகும். படுகொலை நடந்த அமிர்தசரஸ் நகரில், சென்ற வருஷம் கூடிய காங்கிரஸில், அரசியல் திருத்தத்தைப்பற்றி சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசியல் சட்டம் அதிருப்திகரமானதென்றும், ஏமாற்றத்துக்கே அது இடந்தருகிறதென்றும், தேவைக்குப் போதாதென்றும், பூரா ஜவாப்தாரியான ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த பார்லிமெண்டார் கூடிய சீக்கிரத்தில் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், பூரா சுய ஆட்சி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுவது சாத்தியமாகும்படி அரசியல் சட்டத்தை அனுஷ்டானத்தில் நிறைவேற்றுவதென்றும், அச்சமயம் தீர்மானிக்கப்பட்டது. இன்றைக்கும் ஷை தீர்மானத்துக்கு எல்லா காங்கிரஸ் காரர்களும் கட்டுப்பட்டு நடக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏன் என்று நான் சொல்லத் தேவையில்லை. பொறுப்பேற்ற எந்த ராஜீய வாதியும் அரசியல் சட்டத்தைத் திருப்திகரமான தென்றாவது தேவைக்குப் போதுமென்றாவது இப்போது சொல்லக்காணோம். எல்லோராலும் அது கண்டிக்கப்படுகிறது. மாகாணங்களில் இருவகையான நிர்வாகம் ஏற்படப் போவதைப் பார்க்கையில், இச் சட்டம் சரிவர அனுஷ்டானத்தில் நடக்குமா வென்ற சந்தேகம் யாருக்கும் உதிக்கும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அரைகுறையான சுய ஆட்சித்திருத்தங்கள் அனுபோகத்தில் பலன் தருமா வென்பதும் சந்தேகம். அரை குறையாகவாவது ஜவாப்தாரியான ஆட்சி ஏற்படுமென்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. மந்திரிகளுக்கும் ஜனப் பிரதிநிதிகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படும் அதிகாரங்களைக் வெகு தூரம் குறைத்துவிடக் கூடியவாறு, விதிகளும் பந்தோபஸ்துகளும் வேண்டிய அளவு செய்யப்பட்டுப் போயின. கவர்னரும் நிர்வாக சபையாரும் இஷ்டப்பட்டாலன்றி, மந்திரிகளின் வார்த்தைக்குச் செல்வாக்கு ஒருபோதும் இராது. மந்திரிகள் தங்களந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளத் தவறிவிட்டால் எல்லா முற்போக்கும் தடைப்பட்டுப் போகும். கவர்னருக்கே நிரம்ப அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி அந்த அதிகாரத்தை அவர் பிரயோகிப்பார். அதன் முடிவு என்னவென்றால், பொறுப்பாட்சியானது பொறுப்பற்ற ஆட்சியாய்ப் போய்விடும். அதாவது ஒருவருடைய ஆட்சியாய் மாறிவிடும். ஜனப்பிரதிநிதி ஆட்சியிராது. கவர்னர்களாய் வருவோர் உறுதியும் பெருமையும் விசேஷமாய்ப் படைத்திருக்கவேண்டும்; கட்சி பேதங்களில் சார்புகொள்ளாதவராயுமிருக்கவேண்டும்; இல்லாவிடில் விரும்பத்தகாத வாதத்துக்கு அது நிச்சயம் இடங்கொடுத்துவிடும். இது நிற்க, ஒதுக்கி வைக்கப்படும் இலாகாக்களின் விஷயத்தில் சட்ட சபைக்கு அதிகாரங் கிடையாது. இப்போதிருக்கிற சட்ட சபையே பலவிதங்களில் உத்தமமென்று சொல்லலாம். மாகாணத்தின் க்ஷேமம் அல்லது சாவதானத்தைப் பாதிக்கக்கூடிய விஷயமென்று சொல்லி எந்த வாதத்தையும், மசோதாவையும், கவர்னர் நிறுத்திவிடலாம். அடித்தும் போடலாம். ஒதுக்கி வைக்கப்படும் இலாகாக்களின் விஷயத்தில் சட்ட சபைக்கு கவர்னர் அதிகாரம் கொடுக்காமலே இருந்துவிடலாம். கடைசியாக, உண்மையான பண சுதந்திரம் தேச ஜனங்களுக்கு அளிக்கப்படவில்லை. ஒதுக்கி வைக்கப்படும் இலாகாக்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் செலவழிக்க நிர்வாக சபையாருக்கு சக்தியிருக்கிறது. சட்ட சபை அதைத் தடுக்கமுடியாது. எந்த அவசரச் செலவுக்கும் கவர்னர் தமதிஷ்டம்போல் பணத்தை யெடுத்துச் செலவழிக்கலாம். இந்த நிலைமையில் பண சுதந்திரம் என்பது வெறும் பேச்சேயாகும். நிர்வாக சபையினரின் தயவில் மந்திரிகளின் இலாக்காக்கள் பிழைக்கவேண்டியிருக்கிறது. சட்ட சபையின் அபிப்பிராயத்தை அது பொருத்திருக்கவில்லை. மந்திரிகளுக்குப் பணம் போதாவிட்டால் புதிய வரிகள் போடவேண்டிவரும். புதிய வரி விதிக்க இனி இடமில்லை. வரிப்பளுவை ஏற்கனவே சுமக்கமுடியவில்லை. மாற்றப்பட்டிருக்கும் இலாகாக்களின் சில உப்புக்குக் கூடப் பிரயோஜனமில்லை. கல்வியும் சுகாதாரமும் நீங்கலாக அங்கு வேலையென்ன இருக்கின்றது? ஸ்தல சுய ஆட்சி கொடுத்தும் ஒன்றுதான், கொடுக்காததும் ஒன்றுதான். இந்தியர் தங்கள் திறமையை நிதர்சனமாய்க் காட்டியிருக்கிற நியாய இலாகா கூட மந்திரிகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. பஞ்சாப் சம்பவங்களையும், நீதி பரிபாலன ஒழுங்கையும், ஊன்றிப் பார்க்கும்போது சிவிலியன்களிடத்தில் அந்த இலாகாவை ஒப்படைக்கக் கூடாதென்றே சொல்லவேண்டும். சட்ட அமுல், நீதி பரிபாலனம் ஆகிய இரண்டும் மாற்றப்பட்டாலல்லது பிரயோஜனமில்லை. நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்குச் சட்டத்திலாவது வக்கீல்களிடத்திலாவது நம்பிக்கையே கிடையாதென்று, லார்டு மார்லி சொல்லியது என் ஞாபகத்துக்கு வருகின்றது. அதிக்கிரமமாய் நடக்கத் தங்களிடத்தில் சக்தியிருந்தாலன்றி நிர்வாக அதிகாரிகளுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. அச்சுச்சட்ட அமுல் ராணுவச் சட்ட அமுல், மற்றுமுள்ள சட்டங்களின் அமுல் ஆகியவற்றை இனி ஜனங்களுக்கு ஜவாப்தாரியான கவர்னமெண்டினிடத்தில் ஒப்படைப்பது தான் நியாயமாயிருக்கும். சிவில கிரிமினல் கோர்ட்டுகளின் அமைப்பு, நிர்வாகம், லாரிபோர்ட்டுகள், பத்திரிகைகள், புத்தகங்கள், அச்சுக்கூடங்கள், குற்றம் புரியும் ஜாதியாரின் மீது கண்காணிப்பு, சிறைச்சாலைகள், ராஜாங்க கைதிகள் நீங்கலாக மற்றக் கைதிகள், சீர்திருத்தச் சாலைகள், ஆகியவற்றின் நிர்வாகம் தட்சணமே மந்திரிகளுக்கு மாற்றப்பட்டுப் போகவேண்டும். பஞ்சாப் சம்பவங்களைப்போல் இனி நடக்காதிருக்க வேண்டுமானால் நமது ஜீவாதாரமான சுதந்தரங்களைச் சட்ட பூர்வமாய்ப் பாதுகாத்தே தீரவேண்டும். நீதி பரிபாலனம் நடத்தவும், அச்சுக் கூடங்களை காயிதா செய்யவும் இந்தியருக்குத் தெரியாத வித்தைகளென்று யாரும் துணிந்து சொல்ல முடியாது. சிவில் சர்விஸ்காரர்கள் வெகுதிருப்திகரமாய் நிர்வகித்து விட்டார்களென்றும் சொல்லுவதற்கில்லை. இந்தியரின் நிர்வாகத் திறமையும் நீதி செலுத்தும் ஒழுங்கும் எத்தனையோ சமயங்களில் சோதிக்கப்பட்டு, மாசற்றதாயிருக்கக் காணப்பட்டன. ஆகையால் அது விஷயத்தில் ஊழல் சொல்லிவிட முடியாது. சுதேச சமஸ்தானங்களில் இந்தியர் திறமையாய் நியாயம் வழங்கி வருவதை நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். பத்திரிகைகளின் மேற்பார்வைகூட அங்கு இந்தியரிடத்தில் தான் இருக்கிறது. ஆகையால் பிரிட்டிஷ் இந்தியாவிலும் அந்த இலாகாக்களை அவசியம் இந்தியருக்கு மாற்றிவிட வேண்டும். இதுகூடச் செய்யாவிட்டால் அரசியல் திருத்தம் என்னபலன் தரப்போகிறது? பேச்சு சுதந்தரமும் எழுத்து சுதந்தரமும் நமக்கில்லாவிட்டால் என்ன பிரயோஜனம்? ஹைகோர்ட்டு ஜட்ஜிகளும் அட்வகேட்டு ஜெனரலுங்கூட இனி கவர்னர் மந்திரிகளின் ஆலோசனையின் பேரில் நியமனமானால் உத்தமமாயிருக்கும். நமது மாகாணத்தின் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு சட்ட சபை பெரிதாக்கப்படவும் வேண்டும் 127 பேர் ஸ்தானம் வகித்தால் போதாது. அதற்கிரண்டு பங்குப்பேர் இருந்தால் சௌகரியமாயிருக்கும். அப்படிச் செய்தால் வகுப்புவாரித் தொந்தரவுகளை ஒருவாறு தீர்த்துவிடுதலும் சாத்தியமாகும். யூனிவர்ஸிட்டியின் பிரதிநிதிகளாய் சட்டசபையில இரண்டுபேராவது ஸ்தானம் வகிக்கவேண்டும். எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஓட்சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். நாடார்களின் பிரதிநிதிகளுக்குச் சட்ட சபையில் கட்டாயம் ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டும். ஸ்திரிகளுக்கு பிரதிநிதித்தியம் கொடுத்துவிடவேண்டும்.

விதிகள் செய்த விசித்திரம்.

அரசியல் சட்டத்தின் கீழ்விதி செய்யும் வேலையை அதிகாரிகள்முடித்து விட்டார்கள். தாராளமான நோக்கத்துடன் நகல் விதிகள் தயாரிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. சட்டத்தின் கருத்தை அப்படியே நிறை வேற்றி வைக்க விதி செய்தவர்கள் கவலைப்படவில்லை யென்று தெரிகிறது. திருஷ்டாந்தமாய் ஒரு விதியை இங்கெடுத்துக் காட்டிகிறேன். சட்ட சபையின் தலைவராவது டிப்டி பிரெஸிடெண்டாவது வரமுடியாத சமயங்களில் சட்ட சபைத்தலைமையை வகிப்பதற்காக நான்குபேர்களை கவர்னர் நியமித்து எப்போதும் தயாராய் வைத்திருப்பார் என்று ஒரு விதி செய்யப்

பட்டிருக்கிறது, இது சட்டத்தில் கண்ட நோக்கத்துக்கே விரோதமாகும். சபையின் உபதலைவர்களைச் சபையோரே தேர்ந்தெடுக்கசட்டத்தில் இடமிருக்கிறது. இப்போது செய்யப்பட்டிருக்கும் விதி அச்சுதந்தரத்தை எடுத்து விடுகிறது. கவர்னருடைய இஷ்டத்தை அது பொறுத்ததாயிருக்கக் கூடாது. கவர்னரே நியமிக்க வேண்டுமென்று வைத்துக் கொண்டாலும் சட்ட சபையாரைப் பார்த்துச் சிலரைத் தெரிந்தெடுத்து கவர்னரின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்று ஏன் விதி செய்திருக்கலாகாது? சட்ட சபையினிடத்தில் கவர்ன்மெண்டுக்கிருந்து வரும் ஆழ்ந்த அவநம்பிக்கைக்கு இது ஓர் அத்தாட்சியாகும். ஆனால் தாராள நோக்கத்துடன் அரசியல் சட்டத்தை நடத்திவைக்கப் போவதாக வெளிக்குச் சொல்லி வருகிறார்கள். சட்ட சபையங்கத்தினரின் சிற்சில கேள்விகளைக் கேட்கமுடியாதபடி செய்துவிட கவர்னருக்கதிகாரம் கொடுக்கவே கூடாது. அது நியாயமான வழியல்ல. கவர்னர் சட்ட சபையின் அங்கத்தினரல்ல. சபைத் தலைமையும் அவர் வகிக்கப் போகிறதில்லை. அப்படியிருக்க கேள்விகளைத் தர்ஜிமா செய்து நிறுத்திவிட அவருக்கு எதற்காக அதிகாரங் கொடுக்க வேண்டுமோ தெரியவில்லை. சபைத் தலைவருக்கு அந்த அதிகாரம் இருந்தால் தான் அழகாயிருக்கும். இஷ்டமானால் மந்திரிகளோ மற்றவர்களோ ஒருகேள்விக்குப் பதில் சொல்ல மறுத்து விடட்டும். மாகாண கவர்ன்மெண்டைச் சேர்ந்த விஷயமல்லவென்று சொல்லி, அதற்குப் பதிலளிக்காதிருந்து விட்டால் நாம் ஒன்றுஞ் செய்யப் போகிறதில்லை. மொத்தத்தில் இவ்வொழுங்கான முறையைக் கைப்பற்றுதால் சட்ட சபைத் தலைவர் வென்று பொம்மையாகவே யிருப்பார். கேள்விகள் கேட்க அனுமதி கொடுக்கக்கூட சட்ட சபைத் தலைவருக்கு அதிகாரமில்லை. சட்ட சபைத் தலைவர்களையும் மந்திரிகளையும் கவர்ன்மெண்டார் எவ்வளவு தூரம் நம்பி நடக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்பது இதிலிருந்தே உங்களுக்குப் புலப்பட்டுவிடும். தீர்மானத்தைப் பொது ஜன நன்மைக்கு விரோதமென்றுவது. மாகாண கவர்ன்மெண்டுக்கு சம்பந்தமில்லையென்றாவது சொல்லி அக்கேள்வியை நிறுத்திவிட கவர்னர் அதிகாரம் பெற்றிருக்கிறார். இதுவும் பலத்த ஆட்சேபத்திற்கிடமாகும். சட்டத்தின் நோக்கத்துக்கு விரோதமாகவே இவ்விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டுக்கு ஜவர்பு சொல்ல இஷ்டமில்லாத எந்தத் தீர்மானத்தையும் கவர்னர் மேற்படி காரணத்தைச் சொல்லி வெகுசுலபமாய் நிறுத்தி விடலாம். பொது நன்மைக்கு விரோதமானதென்றும் சாதகமானதென்றும் ஒரு விஷயத்தை நிர்த்தாரணஞ் செய்யும் அதிகாரம் கவர்னருக்குக் கொடுப்பதில் அர்த்தமேயில்லை. இவ்வளவு கஷ்டங்களையும் தாண்டி ஒரு தீர்மானம் சட்டசபையில் கொண்டுவரப்பட்டு, நிறைவேறுகிறதென்று வைத்துக் கொள்வோம் வெறும் அது பாவிக்கப்படுமாம். அவ்வளவு தான் அதற்கு யோக்கியதை. இப்படியிருக்கையில் தீர்மானம் கொண்டு வருவதற்குக்கூட ஒரு எல்லை கட்டுவது முற்றிலும் அவசியமாகும். நிற்க, ஒரு அவசர விஷயமாய் வாதிப்பதற்காக சட்டசபை நடவடிக்கை அட்டவணையை நிறுத்திக்கொள்ளும்படி யாரேனும் பிரேரணை செய்தால் கூட அதற்கு கவர்னரின் அனுமதி வேண்டுமாம். பொது நன்மையை உத்தேசித்து அவர் அனுமதி கொடுக்க மறுத்து விடலாம். இதையெல்லாம் பார்க்கும்போது இப்போதிருக்கிற சட்டசபை பாதகமில்லையென்று படுகிறது. சட்ட சபையையும் சரி, மந்திரிகளையும் சரி, கவர்ன்மெண்டார் நம்பிப்போகிறதில்லை.

மேலே சொல்லிய விதிகள் ஒரு புறமிருக்க, வேறு சில விதிகளை கவனிப்போம். சட்டத்தில் நிபந்தனைகளுக்கும் கூட்டுக்கமிட்டியின் நோக்கத்துக்கும் மாறுபாடாய்ச் சில விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாற்றப்பட்ட இலாகாக்கள் சம்பந்தப்பட்ட வரையில் மந்திரிகள் ஒருமனதாய் ஒற்றுமைக்க வேண்டுமென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறது. பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டியார் இதை ஸ்பஷ்டமாய் தெரிவித்திருக்கிறார்கள். ஆரம்பம் முதற்கொண்டு மந்திரிகள் ஒற்றுமையாய்உழைக்கவசதிகள் இருக்க வேண்டுமென்று கூட்டுக் கமிட்டியார் கண்டிப்பாய் சொல்லியிருககின்றனர். அப்படியிருக்க. கவர்னரும் அந்தந்த இலாகா மந்திரியுந்தான் ஒவ்வொரு இலாகாவின் நிர்வாகத்தையும் சேர்ந்து நடத்திவைக்க வேண்டுமென்றும், மந்திரிகள் ஒற்றுமைக்கத் தேவையில்லையென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் நினைப்பது போல் 45-வது விதியிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையைப்போல் இந்தியாவிலும் மந்திரிகள் ஒற்றுமையா யிருக்கவேண்டு மென்று கூட்டுகமிட்டியார் அபிப்பிராயப்பட, இந்தியா கவர்ன்மெண்டார் அதற்கு நேர்விரோதமாப் முடிவுசெய்ய எத்தனிக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் என்னவென்று நமக்குத்தெரியும். மந்திரிகளின் ஒரு மனதான முடிவு கவர்னரைக் கட்டுப்படுத்தக் கூடாதென்று அவர்கள் நினைப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. அவை நமக்குத்தெரியும். மந்திரிகளின் அந்தஸ்தைப் பாருங்கள். பெரிய உத்தியோக வர்க்கத்தைச்சேர்ந்த எந்த உத்தியோகஸ்தரையும் கண்டிக்கவோ. அவருக்குப் பிரதிகூலமான ஓர் உத்தரவை மகஜர்மீது பிறப்பிக்கவோ, கவர்னரின் அனுமதியின்றி மந்திரிகளுக்கு அதிகாரமில்லை. உத்தியோகஸ்தர்களை ஓரிடத்திற்கு மாற்றுவதென்றால்கூட மந்திரிகளுக்கு சொந்தத்தில் அதிகாரமில்லை. கவர்னரின் சம்மதத்துக்குட்பட்டே அவர்கள் ஒவ்வோரு காரியமும் செய்யவேண்டியிருக்கும். இந்த நிலைமையில் எந்த உத்தியோகஸ்தர்தான் மந்திரிகளிடத்தில் மதிப்பு வைப்பர்? மந்திரி உத்தியோகம் மகா கஷ்டமாயிருக்கும். தனியே எதையுஞ் செய்ய அவர்களுக்கு அதிகார மிராது. அவர்கீழ் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் மட்டும் இஷ்டப்படி காரியங்கள் செய்யலாம், நிரப்பச் சம்பளம் வாங்கலாம், அதிகங் சம்பளத்துக்கும் வகை தேடிக்கொள்ளலாம்! கீழ் உத்தியோகஸ்தரைக் கண்டிக்கக்கூட சக்தியில்லாத ஒரு மந்திரி என்ன மந்திரி? ஏன் இவ்வாறு விதி செய்யவேண்டும்? இத்தனை காலமாய் நிர்வாக சபை மெம்பர்களுக்கு அச்சுதந்தரம் இருந்துவரவில்லையா? சிவிலியன் ஜட்ஜிகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் கண்டித்ததில்லையா? சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களை ஆதியில் யார் நியமித்தாரோ அவர்களுக்குத் தான் வேலையிலிருந்து நீக்கவும் அதிகாரமுண்டு. சிவில் ஸர்விஸ் வர்க்கத்தினருக்கு இந்த ஒரு அனுகூலம் போதாதா? எந்த விஷயத்திலும் கவர்னருக்கு அப்பீல் செய்ய அனுமதி கிடைக்குமானால் மந்திரிகளிடத்தில் அவர்கள் நிச்சயம் மதிப்பு வைக்கமாட்டார்கள். மந்திரிகளைக் கூட கீழ்தர உத்தியோகஸ்களால் கவர்ன்மெண்டார்பாவிப்பார்களோ என்னவோ? இந்தியரிடத்தில் எவ்வளவு நம்பிக்கை பாருங்கள்! ஒற்றுமைப்பு எங்கிருந்துவரும்? மாற்றப்படும் இலாகாகளுக்கு ஒவ்வொரு விசேஷ சந்தர்ப்பத்தில் கவர்னரின் மத்தியஸ்தத்தால் நிர்ணயமாகும் தொகையானது அச்சட்டசபைகலையும் வரையில் அப்படியேதானிருக்கும். ஒரு வருஷத்துக்குத்தான அவ்வுத்தரவு செல்லுமென்று ஏன் விதிசெய்யக்கூடாது?

மொத்தத்தில், வெகு அவசரப்பட்டுக் கொண்டு விதிகள் செய்து விட்டார்கள். பொதுஜன அபிப்பிராயத்தை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை மிதவாதிகள் என்று அழைக்கடுபடுவோர்தான் ஆலோசனைக் கமிட்டிகளில் ஸ்தானம் வகித்திருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் அலட்சியம் செய்யப்பட்டனர். அரசியல் சட்டத்தை தாராள நோக்கத்துடன் நிறைவேற்றி வைக்க முடியாதபடி விதிகள் செய்யப்பட்டு போயின. சில விதிகள் பிற்போக்காயுமிருக்கின்றன. சட்ட சபைக்கு கவர்னரே தலைவர் என்று சொல்லும்படி அவரிடத்தில் பல அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுப் போயின. சட்டசபையின் அதிகாரமும் போய் விட்டது. உண்மையில் இதுதான் ஒற்றுமைக்குப் போடப்பட்டிருக்கும் விதையா?

பணப் பிரிவினை விஷயம்.

இந்தியா கவர்ன்மெண்டின் செலவுக்குச் சென்னை மாகாணம் கொடுக்கவேண்டுமென்று விதித்திருக்கும் வீதாசாரம் சகிக்கக்கூடாதகாயிருக்கிறது. மெஸ்டன் கமிட்டியின் சிபார்சை மோசமென்றே சொல்லவேண்டும். கையிருப்பிலுள்ள பணத்தையெல்லாம் சென்னை கவர்ன்மெண்டார் வெகு காலமாய் வாரி வழங்கி வந்தவையால், அந்தப் பாபத்துக்கு இப்பொழுது பலனை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. சரியான இனங்களில் அம்மிச்சத் தொகைகளைச் செலவு செய்திருந்தால் இவ்வளவு கஷ்டம் நமக்கு வந்திராது. கல்வி யபிவிருத்தி, சுகாதாரம், வாச வசதிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தருக்குச்சம்பள உயர்வு, ஆகியவைபோன்ற செலவுகளுக்குப்பணம் வைத்துக்கொள்ள இடமில்லாமல், 348 லட்சம்

ரூபாயை இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஒரேயடியாய் இட்டு நிரப்புவது சிறிதும் நியாயமகாது. இந்தியா கவர்ன்மெண்டுக்கு 9 கோடி ரூபாய் துண்டுவிழ நியாயமேயில்லை. இந்தியா கவர்ன்மெண்டார் செலவைக் குறைப்பதுமில்லை. ஸ்டாம்பு வருமானத்தை நமுதுக்குக் கொடுத்துவிட்டு, அளவற்ற தொகைகளை அடித்துக்கொண்டு போவது தர்மமாகாது. ஒரு தம்பிடிகூட இந்தியா கவர்ன்மெண்டுக்கு நம்மால் கொடுக்கமுடியாது. நமது கட்சிக்குச் சென்னை கவர்ன்மெண்டின் ஆதரவும் இருந்து வருகிறது. ஆகையால் திருப்திகரமான முடிவு ஏற்படுமென்று நம்புகிறேன்.

நாம் செய்யவேண்டிய வேலை.

சீர் திருத்த விஷயமாய் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது அடுத்தாற்போல் யோசிக்கவேண்டிய விஷயம். சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் பூரா ஜவாப்தாரியான ஆட்சி பெற வேலைசெய்ய வேண்டுமென்று காங்கிரஸில் மிக்கத் தெளிவாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்மட்டிருக்கின்றது. நாம் சீர் சட்டத்தைக் கெடுக்க யோசித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படி நினைத்திராவிட்டாலும் நமது சில நண்பர்களைத் திருப்திசெய்வதற்காவது நாம் அப்படி செய்யவேண்டும் போலும். காங்கிரஸ்காரர்களை அமிதவாதிகள் என்றும் அழைக்கின்றனர். இவ்வாறு சொல்லவதெல்லாம் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும், மிதவாதிகளனெத் தங்களை அழைத்துக்கொள்ளும் நம் நாட்டினர் சிலரும் விசேஷமாக மிஸஸ் பெஸண்டுமேயாகும்.

நமது உத்தேச வேலைகளைப்பற்றி லோகமான்ய திலகர் அழுத்தமானதும் ஆதாரமுள்ளதுமான அறிக்கையொன்றை வெளியிட்டபின்கூட சென்னை மாகாண கமிட்டியார் தங்கள் உத்தேசவேலைகளை வெளிவிட்டபிறகும் இக் குற்றம் அடிக்கடி காங்கிரஸ்காரர்கள் மீது சாட்டப்படுகின்றது. சீர் திருத்தச் சட்டத்தைக்கெடுத்து விடுவதாகச் சொல்வது புத்தியில்லாத்தனமேயென்று நான் சொல்லவேண்டியிருக்கிறது. அப்படி ஒருவரும் கெடுத்துவிடாதபடி சட்டமும் அதன் விதிகளும் மிக்க ஜாக்கிரதையுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு காங்கிரஸ்காரர் சட்டத்தைக்கெடுக்க வழி தேடினாலும் அதினின்றும் தப்ப அதிலேயே வேறுவழி காட்டப்பட்டிருக்கின்றது.

புது சட்ட சபையில் காங்கிரஸ்காரர் மெஜாரிட்டியாகவாது மைனாரிட்டியாகவாவது விருப்பார்கள். அவர்கள் மெஜாரிட்டியாக விருந்தால் தங்கள் செல்வாக்கினால் தங்கள் கட்சியைச்சேர்ந்த ஒருவரை மந்திரியாக அடைவார்கள். அப்பொழுது சீர் திருத்த சட்டத்தைச் சரியாக வேலை செய்யவேண்டியவர்கள் காங்கிரஸ்காரரே. காங்கிரஸ்காரர்கள் மைனாரிட்டியாராக விருந்தால் நியாயமான வழிகளில் தங்கள் கோரிக்கைகளைக் கவனிக்கும்படிசெய்து காங்கிரஸ் கோரிக்கைகளுக்கு விரோதமாக மந்திரி சபையிருந்தால் அதை ஓட்ட முயற்சிப்பார்கள்.

காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் ஸ்தானம் பெற அபேக்ஷகராய் நிற்காமலிருந்துவிட்டு சட்டசபையில் ஸ்தானம் பெறுவிட்டால் மிதவாதிகள் குற்றங் கூறுவதற்கு இடமேயில்லை. அப்பொழுது அவர்கள் அடித்தது ஆட்டமாக விருக்கும். இந்நாட்டிலுள்ள எந்தக் கட்சியாரும் தங்களுக்குத்தான் மூளையுள்ளதென்றும் அநுபவமுள்ளதென்றும் தங்களுக்குத்தான் வேலை செய்யும் சாமர்த்திய மிருக்கின்றதென்றும் தேச பக்தி யிருக்கின்றதென்றும் சொல்லிக்கொள்ளமுடியாது. சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியார் வெளியிட்டுள்ள தங்கள் உத்தேச வேலைகள் அடங்கிய அறிக்கையில் நமது உண்மையான நிலைமை யின்னதென விளக்கப்பட்டிருக்கின்றது. அதில் காங்கிரஸ்காரர் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கெண்டு அது ஜெயமடையும்படி வேலை செய்வார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நாம் இப்பொழுதே பூரா ஜவாப்தாரியான ஆட்சி பெறுவதற்கு அருகதையுடையவர்களென்பதே நமது அபிப்பிராயம். 10 வருஷங்களுக்குப் பிறகு தான் நமக்கு அநுபவமுண்டாகுமென்பதை நாம் அங்கீகரிக்கவில்லை. நாம் பூரா ஜவாப்தாரியான ஆட்சி பெறுதவரையில் நம் நாட்டின் பொருளாதார நிலைமையும் விருத்தியடையாது. சரியான கல்வி முறையும் நம் நாட்டில் தழைத்து ஓங்காது. சுகாதார முறைகளும் நாம் வேண்டும் இன்னும் பல சீர்திருத்தங்களும் கிடைக்காது சீர்திருத்த சட்டத்தை ஏற்று நாம் எவ்வாறு வேலை செய்கின்றோமென நம்மைப் பரீக்ஷீத்துப் பார்த்து சுயாட்சி வழங்குவதற்கு நாம் அருகதையுடைவர்களா இல்லையாவெனக் கண்டறியப்போவதாகச் சொல்வதையும் நாம் அங்கீகரிக்கமுடியாது. சீர்திருத்த சட்டம் சரியானபடி வேலை செய்யப்படாமல் தவிறிவிடுமாயின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. அன்றியும் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் அரை குறையான சீர்திருத்தங்களைக்கொண்டு 10 வருஷம் வரையிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலோ நமது பிறப்புரிமையைக் கேட்காமலிருக்கமுடியாது. நியாயமான வழியில் நாம் விருத்தி யடைவதற்கு நம்முடைய ஜீவதாரமான சுதந்தரங்களைச் சட்ட பூர்வமாய் அங்கீகரிக்கவேண்டியது அத்யாவசியம். விஷயங்களை வெகு நுட்பமாய் கண்டறியும் சில நிபுணர்கள் இதை அங்கீகரிக்க மறுப்பதை நான் ஒப்புகொள்ளமாட்டேன். ஜவாப்தாரியான ஆட்சி கிடைத்துவிட்டால் சுதந்தரங்களை சட்ட பூர்வமாய் உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லையென அவர்கள் நினைக்கின்றனர். அப்படியாயின் அதற்குள் நாம் அடக்கு முறைச் சட்டங்கள் பிறப்பிக்க அதிகாரிகள் வைத்திருக்கும் அதிகாரத்தைக் குலைக்கப் பார்க்க வேண்டும். இப்பொழுது மத்திய கவர்ன்மெண்டுக்கு ஒரு ஜவாப்தாரித்துவமும் ஏற்பட்டுவிடவில்லை. நாட்டின் பாதுகாப்புக்காகவும் பிரிட்டிஷ் இந்தியாவின் நன்மைக்காகவும் சட்டங்கள் ஏற்படுத்தும் உரிமை கவர்னர் ஜெனரலுக்கே விடப்பட்டிருக்கின்றது. மாற்றப்பட்ட இலாகாக்களின் விஷயமாகவும், கவர்னரின் முடிவையும் இரு சபைகளின் தீர்மானத்தையும் கூட கவனிக்காமல் தர்மிஷ்டப்படி சட்டங்கள் பிறப்பிக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. பிறப்புரிமை என்ற விஷயம் அமெரிக்கர்களுக்கு நன்றாய்த் தெரியும். சட்டம் செய்யும் விஷயத்தில் சிலரைப் போல நாம் முழு ஆதிக்கத்தையும் கேட்கவில்லை. நம்மை நாம் காத்துக்கொள்ளவே சுதந்தரங்கள் வழங்க வேண்டுமென மன்றாடுகின்றோம். தாராளமாய் எழுதுவதற்கும் பேசுவதற்கும் சுதந்தரம் கொடுக்கவேண்டுமென்று கேட்கின்றோம்.

அச்சுச் சட்டத்தைப் பூராவும் ரத்து செய்துவிடாமல் சற்று திருத்தியமைத்தால் மாத்திரம் போதுமென ஒரு இந்திய நிபுணர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார், அவ்வபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாதென மிக்க வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அச்சுக்கூடங்கள் சுயேச்சையுள்ளனவாயிருக்கவேண்டும் ஜாமீன் தொகைகளொன்றும் கேட்கக்கூடாது. மாஜிஸ்டிரேட் முதலியவர்களும் அவைகளின் விஷயத்தில் தலையிடக்கூடாது. அச்சுச் சட்டத்தையும் ரௌலட் சட்டத்தையும் அதைப்போன்ற இன்னும் பல அடக்குமுறைச் சட்டங்களையும் அடியோடு ரத்து செய்யும்படி நாம் கேட்கவேண்டும்.

இவைகளுக்கெல்லாம் இடம் கொடுத்து, நாம் பூரா ஜவாப்தாரியான ஆட்சி பெறுதற்கு அருகதையுடையவர்கள் என்ற நோக்கத்துடனும், அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானங்களுக் கேற்ப அதைக்கூடிய சீக்கிரம் அடையப்போகிறோம். என்ற எண்ணத்துடனும் சீர்த்திருத்தச் சட்டத்தின் கீழ் சரியானபடி வேலை செய்யவேண்டும்.

மிஸ்டர் மாண்டேகு ஸிவில் சர்விஸை சேர்ந்தவர்களின் பாது காப்புக்கு வேண்டிய எல்லாவற்றையுப் சட்ட பூர்வமாய்ச் செய்து விட்டு ஜனங்களின் பிரதிநிதிகளடங்கிய கவர்ன்மெண்டுக்கு வேண்டிய விதிகளை இந்தியா கவர்ன்மெண்டாரே ஏற்படுத்திக் கொள்ளும்படிச் செய்து விட்டதை நாம் பார்த்தோம். விதிகள் சட்டத்திற்கும் கேவலமாக விருப்பதோடு அதன்படி சட்டசபையின் பிரஸிடெண்டுக்கு உண்மையில் ஒரு அதிகாரமுமில்லை கவர்னரே உண்மையில் சபையின் பிரஸிடெண்டாக விருப்பார் மந்திரிகள் தங்களின் கீழ் வேலை பார்க்கும உத்தியோகஸ்தர் விஷயத்திலும் அதிகாரம் செலுத்த சுதந்தரம் வகிக்காமலிருக்கும்படி விதிகள் செய்யப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

(இன்னும் வரும்)

(இரண்டாம் பக்கம் தொடர்ச்சி.)

ஒப்புக் கொள்ளும்படி தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டைக் கட்டாயப் படுத்த வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டையும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டையும் கேட்டுக் கொள்ளுகிறது.

(பி) கீழ் ஆப்பிரிக்காவில் இந்தியருக்கு விரோதமாகச் செய்யப்பட்டு வரும் கிளர்ச்சி அயோக்கியத் தனமான தென்றும் அந்த நாட்டை வசப்படுத்தி வாசத்திற்கு யோக்கியமாகச் செய்த இந்தியர்களிடம் நன்றியில்லாத காரியமாகுமென்றும் இந்தக் கான்பரென்ஸ் ஆட்சேபிப்பதுடன், இந்தியாவிலிருந்து அங்குப் போய் தாராளமாகக் குடியேற உள்ள பாத்தியதையையும் அங்கும் ஜெர்மனியினிட மிருந்து பிடிக்கப் பட்ட நாட்டிலும் அவர்களுடைய சமூக ராஜீய சுதந்தரங்களையும் இந்தியா கவர்ன்மெண்டு பாதுகாத்துத் தருமென்று நம்புகிறது.

(ஸி) பிஜித் தீவில் கலகம் ஏற்பட்டதாகச் சொல்லி, ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து இந்தியர்கள் மீது நெருப்பு ஆயுதங்களைப் பிரயோகித்ததையும் இந்தக் கான்பரென்ஸ் கண்டிக்கிறது.

சீர் திருத்தம்.

11 (ஏ) அமிர்தசரஸ்காங்கிரஸ்தீர்மானத்தை அனுசரித்து, இந்தியா உடனே பூரா சுய ஆட்சி பெற அருகதையுடைய தென்பதை இந்தக் கான்பரென்ஸ் அறிவிப்பதுடன் அதற்கு எதிரிடையாக எங்கே யாரால் என்ன சொல்லப் பட்டிருந்த போதிலும் அவைகளை ஆட்சேபிக்கிறது.

(பி) 1919-ம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தினால் ஏற்பட்டுள்ள திருத்தங்கள் போதா வென்றும், அதிருப்திகரமானவை யென்றும், ஏமாற்றத்தை விளைவித்து விட்ட தென்றும் கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

(ஸி) சுய நிர்ணய சுதந்தரத்தை அனுசரித்து இந்தியாவில் பூரா சுய ஆட்சியை ஏற்படுத்த பார்லிமெண்டு சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கான்பரென்ஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

காங்கிரஸ் முன்னணி வேலை.

111 (ஏ) மாகாண சட்ட சபைக்கும்இந்தியா சட்ட சபைக்கும் சமீபத்தில் நடைபெறப் போகும். எலெக்ஷன்களில் அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீகரித் திருக்கிறவர்களுக்கும் ஓட்டர்களுக்கும் வழி காட்டியாக இருப்பதற்காக உத்தேசவேலைகளைக் குறித்து மாகாண காங்கிரஸ் கமிட்டி. தயாரித்திருக்கும் திட்டத்தை இந்த கான்பரென்ஸ் அங்கீகாரம் செய்கிறது.

(பி) வரப்போகும் எலெக்ஷன்களில் அமிர்த சரஸ் காங்கிரஸ் தீர்மானங்களையும் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் திட்டத்தையும் அங்கீகரிக்கிறவர்களையே பிரதி நிதிகளாகத தெரிந்தடுத்தனுப்பும்படி ஓட்டர்களை இந்தக் கான்பரென்ஸ் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுவதுடன், ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளையும், காங்கிரஸின் லட்சியங்களையும், ஒப்புக் கொள்ளுகிறது, காங்கிரஸைச் சேர்ந்த ஸ்தாபனங்களையும் இதர ராஜீய சபைகளையும் இந்த லட்சியம் சித்தியடைவதற்கு அவசியமான காரியங்களைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

வரப்போகும் எலெக்ஷன்கள்.

IV வரப்போகும் எலக்ஷன்களில் அமிர்தசரஸ் தீர்மானங்களை ஒப்புக் கொள்ளும் காங்கிரஸ் வாதிகளே சட்ட சபைகளுக்கு அனுப்பப் படுவதற்குப் பல ஜில்லாக்களிலு முள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்கள், தேசியச் சங்கங்கள், காங்கிரஸ் காரர்கள் இவர்களுடன் ஒற்றுமையாக அவசியமான காரியங்களைச் செய்வதற்காக, அதிக மெம்பர்களைச் சேர்த்துக் கொள்ளும் அதிக காரத்துடன் மெஸ்ஸர்ஸ் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், எஸ் கஸ்தூரி ரங்கய்யங்கார், என். ஏ. வி. சோமசுந்தரம் பிள்ளை, சனம் ராமனாத புரம் ராஜாக டாக்டர் சுப்பராயன் இவர்களடங்கிய கமிட்டியை கான்பரென்ஸ் நியமனம் செய்கிறது.

துருக்கி உடன் படிக்கை.

(ஏ) துருக்கிக்கு விதிக்கப் பட்டிருக்கும் சமாதான நிபந்தனைகள் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியின் கவர்ன் மெண்டார் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளுக்கு நேர்மாறாக இருப்பதுடன் இந்தியாவிலுள்ள முஸ்லீம்களின் மத உணர்ச்சிக்கும், நேச தேசத்தினரால் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கும் தேசீய சுய நிர்ணய லட்சியத்திற்கும் விரோதமாயிருக்கிறது என்று இந்த கான்பரென்ஸ் பலமாக அபிப்பிராயப் படுகிறது.

(பி) யுத்தத்தில் கிரேட் பிரிட்டன் இந்தியாவின் மனிதர்களையும் ஆதாய மூலங்களையும் வெகு தாராளமாக உபயோகித் திருக்கையில் முஸல்மான்களும் ஹிந்துக்களும் செய்த உதவியானது கிலாபத்தில் அதிகாரத்தையும் கௌரவத்தையும் அடியுடன் நசுக்குவதாகவும் இஸ்லாம் புண்ணிய க்ஷேத்திரங்களை கலிபாவினிட மிருந்து பிடுங்கி முஸ்லீம்களல்லாதவர்கள் ஆதிக்கத்துக்குட் படுத்துவதாகவுமான நிபந்தனைகள் துருக்கிக்கு விதிக்க இடமாகி விட்டதைக் கண்டு இந்தக் கான்பரென்ஸ் வருந்துகிறது.

(ஸி) இந்திய முஸ்லீம்களின் மேற்கண்ட நியாயமான கோரிக்கைகளையும் மத உணர்ச்சியையும் மதித்து மாட்சிமை தங்கிய சக்கா வர்த்தியின் கவர்ன் மெண்டாரும் இந்தியா கவர்ன் மெண்டாரும் சமாதான உடன் படிக்கையை மாற்ற வழி தேடாத வரையில் படிப்படியாக ஒற்றுழையாமை திட்டத்தை அனுஷ்டிக்க வேண்டிய இந்த தேச மகா ஜனங்களின் கடமையாகி விடுமென்று இந்த கான்பரென்ஸ் அபிப்பிராயப் பட்டு அவ்விதக் கொள்கையை அங்கீகாரம் செய்யும்படிஸ் பெஷல் காங்கிரஸுக்கு சிபார்சு செய்கிறது.

பஞ்சாப் கொலை.

VI (ஏ) காங்கிரஸ் சப்கமிட்டியார் மிகவும்சிரமப் பட்டு விசாரணை செய்து ரிப்போர்ட்டு செய்ததற்கு இந்த கான்பரன்ஸ் நன்றி செலுத்துவதுடன் அவர்களுடைய முடிவை அங்கீகாரம் செய்கிறது.

(பி) தோடாரா தொழிச் சட்டத்தை உடனே ரத்து செய்து விட வேண்டும்.

(ஸி) பஞ்சாப்பில் கொடுமையான ஆட்சியை, நடத்தியதற்கும், முக்கியமாக 1919-ம் வருஷத்தில் நடத்திய சம்பவங்களுக்கு ஜவாப்தாரியாக இருந்ததற்கும் ஸர்மைக் கேல் ஓட்வியரை பார்லிமெண்டு முன்பாக விசாரணைக்குக் கொண்டு வருவதின் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ சிட்சைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், பஞ்சாப்பில் சில முக்கிய இடங்களில அக்கிரமங்களைச் செய்ததற்காக ஜெனரல் டயர் கர்னல் ஜான்ஸன், கர்னல் ஓபிரீன் பாஸ் ஓர்த், ஸ்மித் இவர்களை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், பாராளும் மன்றத்திற்கு மனுச்செய்து கொள்ள வேண்டும்.

(டி) லார்டு செம்ஸ் போர்டை பாராளும் மன்றத்தின் முன்பாக விசாரணைக்குக் கொண்டு வர வேண்டும்.

(இ) பஞ்சாப்பில் நடந்த அக்கிரமங்களுக்கு ஆளானவர்களிடம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுவதுடன் நிர்க்கதி யாகப் போனவர்களுக்குக் கவர்ன்மெண்டார் பென்ஷன் கொடுப்பதன் மூலமாகவோ வேறு விதமாகவோ உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

(எப்) பஞ்சா பெருவதை விஷயத்தில் ஆதி முதல் மிஸ்டர் மாண்டேகு காட்டி வந்திருக்கும் மனோ பாவத்தையும் ஹண்டர் கமிட்டி மெஜாரிட்டி ரிப்போர்ட்டை அவர் அங்கீகரித் திருப்பதையும் கான்பரென்ஸ் பலமாகக் கண்டிக்கிறது.

(ஜி) ஹண்டர் கமிட்டி மெஜாரிட்டி மெம்பர்களின் முடிவையும சிபார்சுகளையும் இந்த கான்பரென்ஸ் நிராகரிப்பதுடன் கமிட்டியார் காங்கிரஸ் கமிட்டியாருக்கு சாட்சியம் விட அவசியமான வசதிகளைச் செய்து கொடுக்காததினால் அவர்களுடைய விசாரணையானது அரைகுறையான தென்றும் ஒரு தலைப் பட்சமான தென்றும், அதிருப்திகரமான தென்றும், அபிப்பிராயப் படுகிறது.

(எச்) ஹண்டர் கமிட்டி மெஜாரிட்டி மெம்பர்களின் ரிப்போர்ட்டும், மிஸ்டர் ஷாபியின் மறுப்புரையைத் தவிர இந்தியா கவர்ன்மெண்டாரின் யாதாஸ்தும், இந்தியா மந்திரியின் யாத[illegible]தும் ஜாதித்து வேஷ புத்தி காட்டுவதையு[illegible]யா கவர்ன்மெண்டு பஞ்சாப் கவர்ன் மெ[illegible]களுடைய பிசகுகளையும், ராணுவ அமுல் காலத்தில் நியமிக்கப் பட்ட அதிகாரிகளின் ஜீவ காருண்ய மற்ற செய்கைகளையும் அலட்சியமாக நினைத்து அவைகள் நியாய மென்று நிரூபிப்பதாக இருப்பதையும் கண்டு இக் கான்பரென்ஸ் மிகவும் வருந்துகிறது. மேலும் அந்த ரிபோர்ட்டும், யாதாஸ்துகளும் இந்தியர்களின் உயிரையும் கௌரவத்தையும் அலட்சியமாக நினைப்பதாக இருக்கின்றன வென்றும், கான்பரெனஸ் அபிப்பிராயப் படுகிறது.

(ஜி) பஞ்சாப்பில் வெளிப்படையான கலக நிலைமையிலிருந்ததாக மெஜாரிட்டி மெம்பர்கள் செய்திருக்கும் முடிவை இந்தக் கான்பரென்ஸ் கொஞ்சமும் சந்தேக மன்னியில் நிராகரித்து, அதற்கு விரோதமாக மைனாரிட்டி மெம்பர்களும் இந்தியா கவர்ன்மெண்டின் இந்திய மெம்பரும் சொல்லி யிருக்கும் அபிப்பிராயத்தை அங்கீகரிக்கிறது.

(ஜே) இந்தியா கவர்ன்மெண்டாரும் பஞ்சாப் கவர்ன்மெண்டாரும் ஒவ்வொரு இடத்திலும் கலவரம் அடங்கிய பிறகு ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததும் கொஞ்சமும் ஜீவ காருண்ய மில்லாமல் அதை அமுல் நடத்த இடங்கொடுத்ததும், அநாவசியமாக நீண்ட காலத்திற்கு அதை அமுலில் வைத்திருந்தும் பெரும் பிசகென்று கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

(கே) பஞ்சாப்பிலும் மற்ற இடங்களிலும் கலகம் நேர்ந்ததற்கு ஸத்தியாக்கிரகம் எவ்விதத்திலும் காரணமல்லவென்று கான்பரென்ஸ் நிச்சயமாக அபிப்பிராயப்பட்டு, இவ்விஷயத்தில் ஹண்டர் கமிட்டி மெஜாரிட்டி மெம்பர்களும் மைனாரிட்டி மெம்பர்களும் செய்திருக்கும் முடிவை நிராகரிக்கிறது.

(எல்) தேசத்தில் கவலைக் கிடமான நிலைமையையும் பர பரப்பும் ஏற்பட்டிருந்த காலத்தில் மகாத்மா காந்தியின் ஸத்தியாக் கிரகமும் உபதேசங்களும் தேசத்தை அடக்கி வைத்திருந்த தென்று கான்பரென்ஸ் அபிப்பிராயப படுகிறது.

(எம்) மாட்சிமை தங்கிய சக்கர வர்த்தி பெருமானின் ஸ்ரீ முகத்தை அனுசரித்து சென்ற வருஷம் பஞ்சாப் கலவரத்திற்காக சிட்சிக்கப்பெற்று தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர் களனைவரையும் விடுவித்து விடும்படி ராஜப் பிரதி நிதியையும், லெப்டினெண்டு கவர்னரையும் இந்த கான்பரென்ஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

(என்) மேலே கண்ட சகிக்க வொண்ணாத அக்கிரமங்களுக்குத் திருப்தி கரமாகப் பரிகாரம் செய்யப் படாவிடில் விசேஷ காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிற ஒத்துழையாமைக் கொள்கையாவது அல்லது வேறு தகுதியான காரியங்களையாவது அனுஷ்டிக்க வேண்டியது தேச மகா ஜனங்களின் கடமையாகு மென்று கான்பரென்ஸ் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(ஒ) புக்காவையும் ரத்ன சந்தையும் விடு[illegible]வ விட வேண்டுமென்று பஞ்சாப் செய்து[illegible]டிருக்கும் வேண்டுகோளை கூடிய சீக்கிரத்[illegible]ர்த்தி செய்து வைக்க வேண்டுமென்று கான்பரென்ஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

7 அரசியல் சட்ட விதிகள்.

அரசியல் திருத்த சட்டத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காக விதிகளைத் தயாரிப்பதற்கு இந்தியா கவர்ன் மெண்டாரும் மாகாண கவர்ன் மெண்டாரும் நியமித்த ஆலோசனைக் கமிட்டி களில் காங்கிரஸ் வாதிகளைச் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டதையும் அந்த விதிகளில் முற்போக்குக் குத் தடையாகவும் பிற்போக்காக வுள்ளவைகளைக் கண்டிப்பதாக இக்கான்பரென்ஸ் தீர்மானிக்கிறது.

8 குற்ற ஜாதியினர் சட்டம்.

இச் சட்டம் எம்மாதிரி பிரயோகிக்கப் படுகிறதென்பதைப் பற்றியும், கன்ன நாட்டில் 13 பேர் சுட்டுக் கொல்லப் பட்டதைப் பற்றியும் ஒரு தீர்மானம் செய்யப் பட்டது.

இதர தீர்மானங்கள்.

அடக்கு முறைச் சட்டங்கள் ரத்து செய்யப்பட வேண்டு மென்றும், சுதேசிய விரதத்தைக் கையாள வேண்டு மென்றும் பிறப்புரிமை சுதந்தரங்கள் கொடுக்கப்பட வேண்டு மென்றும் மிஸ்டர் ஹார்னிமான் இந்தியாவுக்கு வர உத்தரவு கொடுக்கப்பட வேண்டு மென்றும், ரெயில்வே கஷ்டங்கள் நீக்கப்பட வேண்டு மென்றும் சர்வ கலாசாலையில் பட்ட தாரிகள் அனைவருக்கும் ஓட் சுதந்தரம் வழங்கப்பட வேண்டு மென்றும் தேசிய இராணுவம் கடற்படை முதலியவைகள் வேண்டு மென்றும் தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்த வேண்டு மென்றும் ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட வேண்டு மென்றும் தீர்மானங்கள் செய்யப் பட்டன. பிறகு ஆப்காரி எக்ஸைஸ் முதலியவற்றைப் பற்றியும், திருநெல்வேலி பாளையங் கோட்டை ஜல வசதியைப் பற்றியும், திருச்செந்தூர் இருப்புப் பாதை இலங்கைத் தொழிலாளரின் நிலை, மண்டபத்திலுள்ள நிர்ப்பந்தங்கள், நீதி நிர்வாக இலாகாப் பிரிவினை பசுவதை நிறுத்துதல் ஆரம்பக் கல்வி மசோதா பிராமண ரல்லாதாருக்கு சர்க்கார் உத்தியோகங்களில் பிரதி நிதித்துவம் காட்டி லாகா குறைகள் பாஷாவாரியாக மாகாணங்களைப் பரித்தல் தமிழ் பாஷாபிவித்தி அடுத்த கான்பரன்ஸ் கூடவேண்டிய இடம் விஷயமாகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(சென்றவாரம் 6ம் பக்கம் தொடர்ச்சி.)

படுக்கை அதிகமாயும் போடக்கூடாது. அதிகமாய் போட்டால் எரு அதிகமாய்க் காய்ந்துபோகும், மெதுவாயும் மக்காது. அதினால் அதிலுள்ள சத்தும்போய்விடும். குழியில் உள்ள எரு, அதின் எல்லா எல்லாபாகத்திலும் ஈரமாகவே இருக்கவேண்டும் எரு எந்த பாகத்திலாவது சாம்பல்வர்ணமாய்த் தோற்றினால் அதுசரியாய் மக்கவில்லை என்பதற்கு அடையாளம். அந்த நிறம் அதிக உஷ்ணத்தைக் குறைக்கிறது. அது மிகவும் வரண்டுபோனதில் ஏற்பட்டது. படுக்கைக்குப் போடுகிற வைக்கோல் முதலானவைகள், நீளமாகவும் கெட்டியாகவும் இருந்தால் எரு சரியாய் அழுகாது. அவ்விதமான படுக்கை வஸ்துக்களை நறுக்கிப்போடவேண்டும். எரு நன்றாய் அழுகி இருந்தாலொழிய அது பயிருக்குப் பயன்படாது. ஏனெனில், அது சீக்கிரம் வேலைசெய்யாது. அல்லாமலும் அது நிலத்தை அதிகமாய் வெடிப்புண்டாகும் படி செய்கிறபடியால் அதிலுள்ள பயிர்கள் வரக்ஷியானால் அதிகமாய் வருந்தும். சரியாய்ப் பக்குவப்படுத்தப்பட்ட எரு கறுப்பு நிறமாயும் இருக்கும்- அது முற்றும் நன்றாய் மக்கிப்போயிருப்பதால் அதை ஒரு கத்தியினால் அறுக்கும்படியான பக்குவத்தோடிருக்கும். குழியிலிருந்து எருவை எடுக்கும்பொழுது அதன் மேலேயிருக்கும் அழுகாதபாகத்தை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்து பின்பு நன்றாய் மக்கிய பாகத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு, அழுகாத பாகத்தை மறுபடியும் குழியின் அடியில்போட்டு முன்போலவே எருவைச் சேர்க்கலாம்.

இப்படி எரு பக்குவபடுத்துவதனால் நாம் வைத்திருக்கும் மாடு ஒன்றுக்கு, வருஷந்தோறும் ஐந்து முதல் ஏழு டன் வரையில் நல்ல எரு எடுக்கலாம். இப்படியல்லாமல் சாணியை வெட்ட வெளியில் குவியலாய்ப் போட்டுவைத்தால் வருஷம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ டன் உபயோகமில்லாத எரு தான் கிடைக்கும். இவ்வாறு செய்வதற்கு உள்ள ஆட்சேபனைகளாவன :—

1. கொட்டிலில் அடைக்கப்பட்ட மாடுகளுக்கு இந்த முறை வியாதியை உண்டாகும் என்ற எண்ணம்.

2. அதற்குப் போடுவதற்குப் படுக்கை அதிகமாய் வேண்டியதாயிருக்கிறது.

பின் சொல்லப்பட்ட விஷய ஸம்பந்தப்பட்ட வரையில் நாம் சொல்லவேண்டிய தென்னவென்றால், தென்கன்னடத்தில் சில பாகங்களில் குடியானவர்கள் தழைகளையும் புற்களையும், அதிகப்பிரயாசைப்பட்டுச் சேர்த்து மாடுகளுக்குப் படுக்கையாய்ப்போடுகிறார்கள். ஆனால் அவர்கள் சிலதினங்களுக்கொருதரம் எருவை எடுத்துப் பள்ளமாய் உள்ள விடங்களில் போட்டுவைக்கிறார்கள். அங்கே போக்குவரத்தாயிருக்கும் கட்டைவண்டிகள் அதன்மேல் போவதினால் அது நன்றாய் அழுத்தப்படுகிறது. முதலாவது ஆட்சேபனையைக் கவனிக்குமிடத்து, அனுபவத்தில் அப்படிச் சொல்லுவதற்குத் தகுந்த காரணமில்லையென்று தெரிகிறது.

எந்தக் காரணத்தைக்கொண்டாவது மேற்சொல்லியவிதம் எருவைச் சேர்ப்பது குடியானவளுக்கு அசௌகரியமாக இருப்பின், அடியில்கண்டமாதிரி அவன் எருச்சேர்க்கலாம் :—

மாட்டுக்கொட்டிலின் அடித்தனத்தை ஸமப்படுத்திக் கெட்டியாக்கிக்கொண்டு பின்பக்கம் வாட்டமாகயிருக்கும்படிச் செய்யவேண்டும். அதிலிருந்து ஒரு சிறுகால்வாய் தோண்டி அக் கால்வாய்வழியாய் தரையில்விழும் மூத்திரங்களெல்லாம் ஓடி கொட்டிலுக்கு வெளியில் ஒரு மூலையில் வைத்திருக்கும் ஒரு பானையில் விழும்படி செய்யவேண்டும். சாணியைத் தினந்தோறும் எடுத்து அந்தக் குழியின்பக்கமும் அடியும் களிமண்ணால் நன்றாய்ப் பூசியிருக்கும் ஒரு குழியில் போடவேண்டும். அதன் பேரில் ஒரு கூரைப் பந்தல் போட்டிருக்கவேண்டும். பண்ணையில் கிடைக்கும் எந்த கந்த மூலகுப்பைகளையும் அந்தக் குழியில்போட்டுவைக்கலாம். தினம்பானையில் சேரும் மூத்திரத்தை அந்தக் குழியில் ஊத்தவேண்டும். சாணி, தழை முதலிய குப்பைகள் எல்லாம்சேர்ந்து ஒன்றாய்க் கலக்கும்படிச் செய்து நன்றாய் மிதித்துக் கீழே அழுத்திவைக்கவேண்டும். அப்படிச் செய்தால் அது ஒத்தாப்போலும் மெதுவாகவும் மக்கும்.

மேலே சொன்ன எருக்குழி கொட்டகைப் போடமுடியாவிட்டால், மண்ணைப்போட்டு மூடலாம். மண்போட்டு எருக்குவியலை மூடிவைப்பது மிகவும் நல்லது என்று அனுபவத்தில் தெரிகிறது. ஏனெனில், இதினால் நல்ல செழிப்புண்டாக்கக் கூடியவஸ்துக்கள் எதுவும் காற்றோடு சேர்ந்துபோகமல் தடுக்கப்படுகின்றன. இந்த முறை திருநெல்வேலியைப்போன்ற சிலவிடங்களில் கையாடிவரப்படுகிறது. அதனால் அதிக லாபமும் உண்டாகிறது. எருவின் மேல்பாகம் காய்ந்துபோனால் அதைப்புறட்டிவிட்டு காய்ந்த பாகமும் ஈர பாகமும் சேர்ந்துபோகும்படி செய்யவேண்டும். அந்தக்குவியலின் முழுப்பாகமும் காய்ந்ததாய்த் தெரிந்தால் கொஞ்சம் ஜலம்விட்டு ஈரமாக்குதல் நலம். எருவை மண்ணைப்போட்டு மூடுவது அதிகமாய் உலர்ந்துபோவதைக் தடுக்கிறது. எருக்குவியலை ஈரமாய் வைத்திருக்கும் வைத்திருக்கும் கருத்து என்னவெனில் எரு முழுவதும் மெதுவாக மக்கும்படியும் அதினால் எருவிலுள்ள வளம் உண்டாக்கும் வஸ்துக்களைக் காப்பாற்றப்பட்டு பயிர்களுக்கு, உடனே பயிர்களுக்குப் பயன்படத் தக்கவாறு செய்யவேண்டும் என்பது தான்.

[குறிப்பு:—மாட்டுக்கொட்டில்கள் எப்பொழுதும் கிராமங்களுக்கு வெளிப்புறத்திலும் கூடுமானால் குடியானவர்கள் வயலிலேயே இருப்பது நலம். கொட்டில்களில் நல்ல காற்று தாராளமாய் உலாவக்கூடியதாய் போதுமான காற்றோட்டம் இருக்கும்படி கட்டவும் வேண்டும்.]

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaamman koil Street, Tanjore.